விளம்பி ௵ புரட்டாசி ௴
ஸெப்டம்பர் - அக்டோபர் 2018

மலர்: 1
இதழ்: 6

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்






MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com





விளம்பி ஹு புரட்டாசி மீ
செப்டம்பர் - அக்டோபர் 2018

மலர்: 1
இதழ்: 6

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## ஸ்ரீ வேதாந்த தேஸிகன்-750 சிறப்பு இதழ்

### திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

**ஞாயிறு முதல் புதன் வரை**

| | | |
|---|---|---|
| 6.30 | - | விஸ்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

**வியாழன் முதல் சனி வரை**

| | | |
|---|---|---|
| 6.00 | - | விஸ்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 8.00 - திருவாராதனம், 9.00 - ஶயநம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்ய நாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004, போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

'ஏற்கும் பெரும்புகழ் வானவரீசன் கண்ணன் தனக்கு ஏற்கும் பெரும் புகழ் வண்குருகூர்ச் சடகோபன்' என்கிறார் ஸ்வாமி நம்மாழ்வார். உயர்ந்தவனான எம்பெருமானைப் புகழ்வதற்குக்கூட தகுதி வேண்டும்; 'ஈசனைப் பாட வல்லவர் என்ற தகுதி' தனக்கு உள்ளது என்கிறார்.

பற்பல கலைவல்ல பாவலரான ஸ்வாமி தேஶிகனின் 750-வது அவதார ஆண்டு பூர்த்தியைக் கொண்டாட, அனைவரிடையே ஒரு ஆரோக்யமான போட்டி நடந்துகொண்டிருக்கும் இத்தருணத்தைத் தவறவிடுவார்களா, மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தான அறங்காவலர்கள்! ஆவணி மாதமேவிழாக் கோலம் பூண்டுவிட்டது. நிகழ்ச்சிகளின் நிழற்படத்தை இவ்விதழில் வாசகர்கள் கண்டு ரஸிக்கும்வரை பொறுத்திராமல், இங்கு பட்டயலிட்டு விடுகிறோம் :-

- ✓ ஸ்வாமிக்கு லாலாம்ருதத்தை ஊட்டி அறிவிற் சிறந்த ஆசானாக ஆக்கிய வெள்ளைப் பரிமுகரின் ஜயந்தீ விழா ஆவணி ஶ்ரவண உத்ஸவம்;
- ✓ திருவதரத்தில் புல்லாங்குழலும், திருமுடியில் மயில்பீலியும், நீல நிறத்திருமேனியும் கொண்டவனாக எப்போதும் த்யாநித்திருக்கும் கண்ணன்-எம்பெருமானின் ஜயந்தீ மற்றும் உறியடி உத்ஸவங்கள்;
- ✓ ஐந்து நாட்களில் அஶீதி பாராயணம் (க்ருஷ்ண ஜுர்வேதம்)
- ✓ ஸ்வாமி தேஶிகனின் திவ்ய ஸஹஸ்ரநாம அர்ச்சனையும், 'தேஶிக நாயகி'க்கு ஸஹஸ்ர தீபாலங்கார பூஜையும்
- ✓ சிறந்த வைஷ்ணவ வித்வான்களைக் கொண்டு, பத்து நாட்கள் விஶேஷ உபந்யாஸங்கள்;
- ✓ ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷனின் நூதன ஸ்வர்ண ஸிம்ஹாஸன ஸமர்ப்பணை
- ✓ தாமே உகந்த தனியனான 'ராமாநுஜ தயாபாத்ர'-த்தின் அவதார உத்ஸவம்;
- ✓ அத்யாபக கைங்கர்ய ஸபையினரின் 'ராமாநுஜ தயாபாத்ர' தனியன் ஸ்வர்ண ஹாரம் ஸமர்ப்பணை
- ✓ வார்ஷிகோத்ஸவத் தொடக்கம் ....
- ✓ 'தேஶிக ஸந்தேஶம்' இம்மாத இதழில் ஐந்து விஶேஷ கட்டுரைகள் ...

'ஏற்கும் பெரும்புகழ் தூப்புல் அற்புதன்தனக்கு, ஏற்கும் உத்ஸவ வைபவங்கள் - வாசகர்கள் ஒப்புவார்கள்.

ஸ்ரீ:

# ‘ராமாநுஜ தயாபாத்ரம்’ தனியன்

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்ய நாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

தனியன் என்பது, எப்போதும் மூலக்ரந்தத்தை ஸேவிப்பதற்கு முன்பு அநுஸந்திக்கப் படுவதும், க்ரந்தத்தை இயற்றியவர்/ அதன் விஷயம்/ இயற்றியவரின் குணாதிஶயங்கள் இவை பற்றி சீடர்களால் போற்றப்படுவதுமான தனிப் பாட்டு/ ஶ்லோகமாகும். மேலும், அதன் பெருமையைப் பார்க்குங்கால், மூலத்தை விட தனித்தன்மை பெற்று நிகரற்று விளங்குவதால், தனியன் எனப்படுகிறது.

இப்படி, ‘வேறானது/ நிகரற்றது’ என்ற குணங்களை நோக்கும்போது, தனியனைப் பிராட்டியோடு ஒப்பிட்டு ரஸிக்கலாம் போலும்! எவ்வாறு எனில், பிராட்டி என்பவள் எம்பெருமானைவிட வேறான தனி ஆத்ம-தத்வம் அல்லவா? இருந்தபோதிலும் எம்பெருமானை ஒருபோதும் விட்டுப்பிரியாதவளாகவும் இருக்கிறாள். மேலும் ‘த்வமேகா’ (ஒத்தாரும்/ மிக்காரும் இல்லாதவள்) என பூஸ்துதியில் அநுஸந்தித்ததுபோல், நிகரற்றும் விளங்குகிறாள். இவளைப் போலவே தனியனும், மூலக்ரந்தத்தைவிட தனியானது; அதே ஸமயம் அதை விட்டுப் பிரியாதது. மேலும் நிகரற்றது. இவ்வளவால், தனியனுக்கே ‘ஶ்ரீத்வம்’ உண்டுபோலும்!

ஸ்வாமி தேஶிகன் விஷயமாக - ‘ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:’, ‘சீரொன்று தூப்புல்’, ‘ஜீவநம் ஜகதாம் ஜீயாத்’, ‘கவிதார்க்கிக ஸிம்ஹாய’, எனத்துவங்கும் தனியன்கள் புழக்கத்தில் உள்ளவைபோல், ‘ராமானுஜதயா பாத்ரம்’ என்ற தனியனும் ப்ரஸித்தமாம். ஆவணி மாதம் என்றவுடன், அத்திங்களில் தோன்றிய இத்தனியனை சிறிது அநுபவிக்க அவா எழுந்ததின் விளைவே இக்கட்டுரை.



ஸ்வாமி தேஶிகனுடன் குமார வரதாசார்யர் மற்றும் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர்

**ப்ரதாந ஶிஷ்யர்**

ஸ்வாமி தேஶிகனின் ப்ரதான ஶிஷ்யர்களில், ஸ்ரீப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர் முக்கிய மானவர். ஆசார்ய ப்ரதிபத்தி மிகுந்து, அவர் அருளிச் செய்தது தான் ‘ராமா நுஜதயா பாத்ரம்’ என்ற தனியன். ஒரு ஆவணி ஹஸ்தத்தில் இத் தனியனை ஆசார்யன் திருவடிகளில் ஸமர்ப்பிக்க, ஸ்வாமி தேஶிகனும் திருவுள்ளமுகந்து, இத்தனியனை அவர்தம் தமிழ்/மணிப்ரவாள க்ரந்தங்களுக்குத் தனியனாக அநுஸந்தித்து வரும்படி ஆஶாஸித்தார். இந்த ஸுதினத்தை, எல்லா திருக்கோயில் களிலும், ‘ராமாநுஜதயா பாத்ர அவதார உத்ஸவமாக’ இன்றும் கொண்டாடுகிறோம்.

**''ராமாநுஜதயா பாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம் |**

**ஸ்ரீமத்வேங்கட நாதார்யம் வந்தே வேதாந்த தேஸிகம் ||''**

'இப்படி ஓர் ஈரச்சொல்லா!' என 'ஆராவமுதே' பாசுரத்தின் முதல் சொல்லைக் கேட்ட மாத்ரத்தில் நஞ்ஜீயர் மயங்கியது போலல்லவா இது உள்ளது. நமக்கு அறிமுகமே, ஆசார்யர்தான்; அவரையிட்டுத்தான் நம்மை அறிவிக்கவேணுமென்பது ஸீதா பிராட்டியார் காட்டிய நெறியாகும்- 'ஸ்நுஷா தஶரதஸ்யாஹம்' என, எதிர்ப்பட்டவர்க்கு தன்னை அறிமுகப்படுத்தினார் அல்லவா! அதனைத் தழுவி இங்கும், வேங்கடநாதனை அவர்தம் ஆசார்யனான அப்புள்ளார் எனப்படும் கிடாம்பி ராமாநுஜாசார்யரை இட்டுக் குறிப்பிடுகிறார் ப்ரஹ்மதந்த்ர ஸ்வாமி - ராமாநுஜரின் தயைக்கு கொள் கலனாய் விளங்குபவரும், என. 'ராமா நுஜார்யாத் ஆத்ரேயாத் மாதுலாத் ஸகலா: கலா: அவாப ...' என்பதல்லவோ வரதாரியர் வாக்கு. இவ்வாறாகில், அப்புள்ளார் தயைக்குமட்டும்தான் இவர் பாரமோ ? என ஐயப்பட வேண்டாம்.

**தயாகரர்களின் பட்டியல்**

உரையாசிரியர்கள், ஸ்வாமி தேஶிகன் எத்துணை பேரின் தயையைப் பெற்றவர் என்பதைப் ப்ரமாணத்துடன் பட்டியலிடு கிறார்கள் :

- ராம + தயாபாத்ரம் = ''அபயம் ஸர்வ பூதேப்ய: ததாமி'' என ராமன் தன் அவதார ரஹஸ்யத்தை வெளியிட்டபோதிலும், அது கடலோசையில் கரைந்துவிட்டது. இது அச்யுதனின் 'நெருக்காத நீள் விரதம்' என ஸ்வாமி நிலைநாட்டியதால்;
- ராமாசராமஸ்சராமௌ, தயோ: + தயாபாத்ரம் = 'உபயாதிஷ்டாநம் ச ஏகம் ஶேஷித்வம், என்றவாறு 'ஏகஶேஷித்வயோகத்தை' வலியுறுத்தியதால்;
- ராமாயா: + தயாபாத்ரம் = 'அஸ்யேஶாநா ஜகத: விஷ்ணு பத்நீ' என வேதம் சொன்னதை எடுத்துரைத்து, ஸ்ரீதத்வத்தை ஸ்தாபித்ததால்;
- ராமாயா: + தயாபாத்ரம் = ராமா எனும் பூதேவி/ நீளை ஆகியோரும் நமக்கு உபாயமும்/ உபேயமும் என நிரூபித்ததால்;
- ராமன் எவர்க்குப் பின் பிறந்தாரோ அவருடைய + தயாபாத்ரம் = என பரசுராமன் / பலராமன் இவர்களை தஶாவதார ஸ்தோத்ரத்தில் துதித்து, அவர்களின் தயைக்குக் கொள்கலம் ஆகிறார்;
- ராமனின் பின்பிறந்தோரின் தயைக்குப் பாத்ரம் என்னலாம் - கைங்கர்ய லக்ஷ்மீயைக் கொண்டவர் என இலக்குவனையும்; பக்தி செய்பவர்களுக்கு முன்னோடி என பரதனையும்; பாகவத-பாரதந்த்ர்யத்தை நடத்திக்காட்டியவர் என ஶத்ருக்நனையும் போற்றி, அவர்கள் தயையை மடைப் படுத்தியவர்;
- பலராமனின் தம்பி க்ருஷ்ணனை யாதவாப்யுதயம் முதலான க்ரந்தங்களால் துதித்து, அவருடைய தயைக்கு பாத்ரமாகிறார்.
- இன்னும் ஆசார்ய பரம்பரையிலே வரும், விஷ்வக்ஸேநர் / அவருடைய அம்ஶமான

## தேஶிக மொழி

**ஆசார்ய ஸந்ததி**

ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு ஸ்ரீமதுரகவிகள் முதலாக உண்டான ஸம்ப்ரதாய பரம்பரை யாலும், திருவாய்மொழி முகத்தாலும் யோக தஶையிலே ஸாக்ஷாத்க்ருதராயும் நம்மாழ்வார் ஆசார்யரானார்.

**- ரஹஸ்யத்ரய ஸாரம்**

ஸ்வாமி நம்மாழ்வார் / ராமமிஸ்ரரின் சீடரான ஆளவந்தார் / ராமாநுஜரான ஸ்ரீபாஷ்யகாரர் இவர்களை பலபடியிலும் ஸ்தோத்ரம் செய்து இவர்களுடைய தயைக்கு பாத்ரமாகியது, குறிக்கப்படுகிறது.

அப்பா! இத்துணை ஆசார்யர்களின் ப்ரீதிக்கு பாத்ரமாகிறாரா!! இங்கு, 'ஶ்ரிய: பதியான ராமன், தானே ரகுபதியாகச் சொன்ன பொருளை, யதுபதியாக நின்று விவரித்து, யதிபதியாக (இராமாநுசராக) ப்ரகடனப்படுத்தினார்,' என ஸ்வாமி ஸாதித்ததை ரஸிக்கவும்.

**பாத்ரம்=** கொள்கலம், எனப்பேசியதால், கீழ்ச்சொன்ன ஆசார்யர்களின் தயையை தான் தேக்கிவைத்தது மட்டுமின்றி, பின்னிட்டோரான நம்போலிகளுக்கும் அது கிட்டும்படியாகச் செய்தது, என்கிறார்.

**ஜ்ஞாந-வைராக்ய பூஷணம் =** நல்லறிவு/ பற்றில்லா நிலை இவையுள்ளவராய்த் தான் விளங்குவதைக் குறிக்கும் - இப்படி சொல்வதைவிட, அவரை அடைந்து, இக்குணங்கள் நிறம் பெற்றன என்பது மிகவும் பொருந்தும். இங்கு ஜ்ஞாநம் என்றதில் : அப்புள்ளாரிடமிருந்து ஆசீர்வாதம் பெற்ற 'யோக்யதா-ஞானம்' / அப்புள்ளாரிடம் உபதேஶம் பெற்ற ஞானம் / சித்து-அசித்து-இறை எனப் பகுத்த தத்வ-ஞானம் / மறந்தும் புறந்தொழா ஞானம் / தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு எனும் வேறு கதி இல்லையென்ற ஞானம் / அர்ச்சையில் கருணை விஞ்சியிருப்பதை அறிந்த ஞானம் / பாகவத-கைங்கர்யத்தின் உயர்த்தியை அறிந்தஞானம்/ அநுஷ்டானம் வரையில் நீட்டிய ஞானம் போன்றவை அநுஸந்திக்கவேணும்.

வைராக்ய-பூஷணம் எனும்போது, எம்பெருமானைத் தவிர்த்த மற்றவைகளில் வைராக்யம் / நிலைக்கு உகந்தபடி, மற்றவைகளைத் துறந்து 'நன்மைவிரும்பிகளின் கூட்டத்தில் தான் இருக்கவேணும்'



என வேண்டியது / புகழ்-பொருள்-துதி இவைகளுக்கு ஆட்படாத வைராக்யம் / மோக்ஷத்தைத்தவிர அந்ய புருஷார்த்தங்களில் வைராக்யமும் / ப்ரபத்தியைத் தவிர்த்த மற்ற உபாயங்களில் பற்றில்லாத் தன்மையும் சொல்லப்படுகிறது.

**ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் =** இவருக்கு ஸ்ரீமத்வம் என்ன? எனில், எம்பெருமானே தொண்டைமண்டல அரசனின் கனவில் தோன்றி தேஶிகாவதாரத்தைப் பற்றிக் குறிப்பிட்ட 'அவதார ஸ்ரீ'யை உடையவர் (அ) கீழே சொன்ன ஜ்ஞாந-வைராக்யங்களுக்கு ஆஶ்ரய பூமியாய் நின்ற ஸ்ரீமத்வம் (அ) நம் அஹங்காரத்தைப் போக்கமுடியாமல் எம்பெருமானும் தோற்று நிற்க, கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையவராக்கி எம்பெருமானுக்கு வெற்றியை தேடித்தந்த விஜய ஸ்ரீயைக் குறிக்கிறது.

**வந்தே =** வணங்கப்படுபவரைச் சொல்வதற்கு முன்பு, 'வணங்குகிறேன்' என்றது, பெயர்

சொல்லும்வரையில் காத்திருக்க முடியாத ஆர்வத்தைக் காட்டு கிறது. இது, பரதன் சித்திரகூடத்தில் ராமனை எட்ட நின்று கண்ட அளவிலே, நெருங்கும் வரையில் காத்திராமல், அப்படியே தரையில் விழுந்து வணங்கியது போலவும்; வ்யாஸ மஹர்ஷியின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில், பீஷ்மர் எழுந்து கைகூப்பியது போலவும்; பராங்குஶ-நாயகி 'சிந்திக்கும் திசைக்கும் தேறும் கைகூப்பும்' என நின்றதுபோலவுமாம்.

**வேதாந்த தேஶிகம் =** எம்பெருமான் அடைத்த அடைமொழியாம்.

இத்தனியன், மந்த்ர-த்ரயம்- அர்த்த பஞ்சகம்- தத்வ த்ரயம் இவைகளின் அர்த்தத்தை உள்ளடக்கிக் கொண்டது எனும் ஸூக்ஷ்ம விஷயத்தை ஆசார்யன் மூலமாக உபதேஶம் பெறவும்.

ப்ரஹ்மதந்த்ரர், தன் பகவத்விஷய காலக்ஷேப ஆசார்யரான வரதாசாரியர் அருளிய 'ஸ்ரீமாந் வேங்கட' தனியனை ஒட்டி, 'ராமாநுஜ தயாபாத்ரம்' தனியனை இயற்றியது, அவருடைய 'பெரியோர்களின் பின்னடி பார்த்து நடக்கும்' பவ்யதையைக் காட்டுகிறது. எங்கனேயென்னில் :

| | | |
|---|---|---|
| ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: | = | ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் |
| கவிதார்க்கிக கேஸரீ | = | ஜ்ஞாந-வைராக்ய பூஷணம் |
| வேதாந்தாசார்யவர்ய: | = | வேதாந்த தேஶிகம் |
| ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி | = | வந்தே |
| அர்த்தமாக குருப்ரஸாதம் | = | ராமாநுஜ தயாபாத்ரம். |

ஸ்ரீமதே ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகாய நம:

## ஸ்வாமி தேசிகனுக்கு பிறந்த நாள் சிறப்புப் பரிசு

**20.09.2018 வியாழக்கிழமையன்று, சுமார் 80 திவ்யதேச மற்றும் க்ஷேத்ரங்களிலிருந்து** எம்பெருமான்களின் ப்ரஸாதங்களை (மாலை, பரிவட்டம் ஆகியவை) மறுநாள் திருநக்ஷத்ரம் கண்டருள இருக்கும் நம் ஸ்வாமி தேசிகனுக்கு அநுக்ரஹமாக அருள தேவஸ்தானத்தால் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வேத கோஷம், குடை அலங்கார அணிவகுப்பு, பேண்டு, வாத்யங்களுடன் பக்தர்கள் புடை சூழ, திவ்ய க்ஷேத்ரங்கலிருந்து வருகை தரும் அர்ச்சக ஸ்வாமிகள் தேசிக பவனத்திலிருந்து ப்ரஸாதங்களை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு திருக்கோயிலுக்கு எழுந்தருளுவார்கள். அங்கு ஆசார்ய ஸார்வபௌமரான வேதாந்த தேசிகனுக்கு, அழிசூர் ஸ்வாமி தலைமையில் நம் ஸந்நிதி அர்ச்சகர்களால் அநுக்ரஹம் செய்யப்படும்.

பக்தர்கள் அனைவரும் **ஸெப்டம்பர் 20 அன்று மாலை 5 மணிக்கு தேசிக பவனத்தில்** திரளாக வருகை தந்து, இந்த வைபவத்தில் கலந்து கொண்டு ஸ்வாமி தேசிகனின் அருளைப் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முன்னதாக, ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் ஸார்பாக புதிய தங்க ஸிம்ஹாஸனமும், அத்யாபக கைங்கர்ய ஸபையினரின் மூலமாக 'ராமாநுஜ தயா பாத்ரம்' தனியன் பொறித்த தங்க ஹாரமும் ஸ்வாமி தேசிகனுக்கு வழங்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ:

# தூப்புற்பிள்ளை அந்தாதி

ஸ்ரீ உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் தட்டை ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்தர ஸித்தாந்த விஜய த்வஜம்**
**விஶ்வாமித்ர குலோத்பூதம் வரதார்யம் அஹம் பஜே**

**ஸ்வாமி ஸ்ரீதேஶிகனின் ஏற்றம்**

மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்துரை மார்பினன் தாள் பணிந்துய்ந்த முதல் தாயான ஶடகோபன் துணையடிக்கீழ் வாழ்வையுகக்கும் வள்ளல் இதத்தாயான ஏரணி கீர்த்தி இராமநுசன். இவ்விரு தாய்களுக்கும் ஒரே பிள்ளையெனத் தோன்றியவர் வண்புகழ் தூப்புல் வள்ளல் நம் ஸ்வாமி நிகமாந்த மஹாதேஶிகன்.

பாவளரும் தமிழ்நாட்டில் கார்மேனி அருளாளர் கச்சியில் தூப்புல் எனும் அக்ரஹாரத்தில் கன்னித்திங்கள் திருவோணத்தில் திருவேங் கடவனின் கண்டாமணியின் அவதாரமாய் அவதரித்த உத்தமர் நம் ஸ்வாமி. இருபது வயதிற்க்குள் ஸகல ஶாஸ்த்ரங்களையும் தம்முடைய அம்மானிடம் அதிகரித்து, ஞானம் அநுஷ்ட்டானம் வைராக்யம் ஒழுக்கம் ஆகியவற்றை அணிகலன்களாகக் கொண்டு, நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றி செந்தமிழிலும் வடமொழியிலும் சிறந்த புலமையுடன் திகழ்ந்து நம் ராமாநுஜ ஸம்ப்ரதாயத்திற்கு பெரும் தொண்டு ஆற்றியவர்.

ஸ்வாமி தம் க்ரந்தங்களில் நயம்படவும், திறம்படவும், நேர்மையான உதாகரணைங்களைக் கொண்டு நிரூபித்தும், சுருங்கச்சொல்லி விளங்கவைத்தும், துருவித்துருவி உரைத்தும், ஒரே ஶ்லோகத்தினால் பல அர்த்தங்களை தெரிவித்தும் மற்றும் பலவகைகளையும் கையாண்டு நம்போன்றவர்களுக்கு உபதேஶித்த உத்தமர்.

**ஸ்வாமி வரதகுருவின் ஏற்றம்**

ஸ்ரீஹஸ்திஶைல ஶிகரோஜ்வல பாரிஜாதனின் கருணையினால் ஸ்வாமி ஸ்ரீதேஶிகனின் குமாரராக அவதரித்தவர் ஸ்வாமி ஸ்ரீ நயினாரா சார்யர் எனும் குமார வரதாசார்யர். ''பிது: ஶதகுணம் புத்ர:'' என்னும் பழமொழிக்கு ஏற்ப வேதவ்யாஸருக்கு ஶுகாசார்யர்போல், அதிமேதாவியாய், ஸ்ரீதேஶிகனிடமே ஸகல ஶாஸ்த்ரங்களையும் கற்று அவர் திருவடிகளிலேயே சிஷ்ய க்ருத்யம் செய்து ஸம்ப்ரதாய க்ரந்தங்களை தம்மை அண்டி வந்த அடியார்களுக்கு அருளுரை கூறிவந்தவர்.

அதிகரண சிந்தாமணி, ந்யாஸதிலக வ்யாக்யனம், மீமாம்ஸா பாதுகா பரித்ராணம், ஸாரார்த்த ஸங்க்ரஹகம், ஸகுணப்ரஹ்ம ஸமர்த்தனம் மேலும் பல ஸம்ப்ரதாய க்ரந்தங் களையும் இயற்றியவர் இம்மஹாசாரியர்,

இவர் ஸ்வாமி ஸ்ரீதேஶிகன் விஷயமாக வடமொழியில் 1) மங்களம், 2)ப்ரார்த்த நாஷ்டகம், 3) ப்ரபத்தி, 4) திநசர்யை 5) மற்றும் விக்ரஹ த்யானம் போன்ற நூல்களையும் தமிழில் பிள்ளையந்தாதியையும் இயற்றி ஸ்வாமி தேஶிகனிடம் தமக்குள்ள ப்ரதிபத்தியை பரக்க வெளியிட்டு அருளியிருக்கிறார்.


**பிள்ளையந்தாதியின் ஏற்றம்**

ஸ்ரீ நயினாராசார்யர் ஸ்ரீ தேஶிகன் திருவடிகளில் உள்ள ஈடுபாட்டினால் அவரிடம் உள்ள அனைத்து குணநலங்களை தாம் அனுபவித்தபடியில் கணக்கில் கொண்டு செழுந்தமிழில் கட்டளைக் கலித்துறை என்னும் செய்யுளிலக்கணத்தைக் கையாண்டு இருபது பாசுரங்களினால் மங்களாஶாஸனம் செய்து அருளிகிறார்.

மதுரகவியாழ்வார் எவ்வாறு மகிழ்மாறனின் பெருமைகளை கண்ணி நுண் சிறுத்தாம்பில் விவரிக்கின்றாரோ அதேபோன்றும், திருவரங்கத்தமுதனார் உடையவரின் பெருமை களை இராமானுச நூற்றந்தாதியில் எவ்வாறு கூறுகிறாரோ அதேபோன்றும், குமார வரதாரியர் இந்த பிள்ளையந்தாதியை அந்தாதி சொற்றொடர் கொண்டு தம்முடைய அவாவெல்லாம் தீரும்படி ஸ்வாமி தேஶிகனின் குணங்களை அலசி அனுபவிக்கின்றார்.

**முதற் பத்து பாசுரங்களின் ஏற்றம்**

இந்தப் ப்ரபந்தத்தின் ஆரம்பத்தில் ஸ்வாமி தேஶிகன் என்னும் ஞானவள்ளல், திருவின் மணாளனையே நெஞ்சில் போற்றும் மாறன்



மறையையும், இராமநுசனின் பாஷியமும் தேறும்படி உரைக்கும் சீர்மை பெற்று அவ்விருவரிடமும் ஒருசேர வாழ்வை உகந்தவர். ஆகையினால் அவருடைய திருவடிகளே தம் சென்னியை அலங்கரிக்கின்றது என்று போற்றுகிறார்.

அடுத்த இரண்டு பாசுரங்களினால் ஸ்ரீதேஶிகனின் திருவடி ஸம்பந்தமே உயர்ந்த புருஷார்த்தமென்றும் உயர்ந்த மறைப்பொருள் களின் உண்மைபொருள்களை உலகத்தாருக்கு உறைத்த இராமாநுசமுனிவரின் பெருமைகளை வாயாரப் புகழும் தூப்புல் முனிவரின் கீர்த்தியை பேசுவதன்றி நமக்கு வேறுவாழ்வு இல்லை என்கிறார்.

ப்ரஹ்மாவின் உத்தரவேதியில் உதித்த மஹாதேவியின் கணவனான தேவாதிராஜனை எப்பொழுதும் சிந்தையில் வைத்து வழிபடும் மெய்யவர் யதிராஜரின் அனுக்ரஹத்தை பற்றி வாழ்பவரான தூப்புல் பிள்ளையின் மெய்ம்மைப் பெருவார்த்தையே நம் போல்வர் வாழ்வதற்கு ஸாதனம் என்றும் ஸ்ரீபாஷ்யகாரருக்கும் ஸ்வாமி ஸ்ரீதேஶிகனுக்கும் அந்த அத்திகிரி அருளாளனே ஆராத்யதெய்வம் என்று சீராகிய வரதாரியன் நான்காம் பாசுரத்தில் அருளிகிறார்.

குமார நயினாராசார்யர் மேலும் ஐந்தாவது பாசுரத்தில் முன்பொருகாலத்தில் இந்த அண்டங்களைப் படைத்து பிரமனுக்கு வேதங் களை உபதேசம் செய்து பின்பு திருவேங்கட மலையில் அர்ச்சா ரூபம் கொண்டு அருள்பாலித்த ஸ்ரீமந் நாராயணன், நம்போன்றவர்களை ஸ்ரீஸூக்திகளாலும் உபதேஶமுத்தாலும் நல்வழிப் படுத்த தூப்புல் திருவேங்கடேஶ குருவாய் இக்கலியுகத்தில் அவதாரம் செய்தான் என்று போற்றுகிறார்.

நான்காம் பாசுரத்தை மனதில் கொண்டு நம் திருமயிலை வேதாந்த தேசிகனின் திவ்ய மங்கள விக்ரஹ ஆலய ப்ரதிஷ்டையின் பொழுது கச்சி வரதனின் ஸ்ரீஶடாரியை தீர்த்த பரிக்ரஹத்திற்காக பெருமாள் கோயிலிலிருந்து எழுந்தருளப் பண்ணியும், ஐந்தாம் பாசுரத்தை மனதில் கொண்டு நம் ஸந்நிதியில் அலர்மேல் மங்கைத்தாயாரையும் ஸ்ரீநிவாஸப்பெருமாளையும் ப்ரதிஷ்டை செய்தும் மயிலை வாழ்ந்த பெரியோர்கள் இப்பிள்ளையந்தாதி ப்ரபந்தத்தில் தம்முடைய ஊற்றத்தினை வெளிப்படுத்தினர் போலும்

மேலும் அடுத்த இரண்டு பாக்களினால் ஸ்ரீதேஶிகன் குடிகொண்ட நெஞ்சமும், அவர் புகழ்பாடும் நாவுடையார்க்கும் பாவங்கள் சேரா என்கிறார். தூப்புல் மாபுருஷனின் பாதங்களை வணங்கினால் இந்த ஸம்ஸாரத்திலிருந்து விடுபடலாம் என்றும், வணக்கம், ஒழுக்கம், இரக்கம், நல்ல பழக்கங்களும் தாமே வந்தடையும் தீயகுணங்கள்விலகிநிற்கும்என்றும்எட்டுமற்றும் ஒன்பதாம் பாசுரங்ளிலும் உபதேஶிக்கிறார்.

பத்தாம் பாசுரத்தில் அடைபவர்களின் தீவினைகளை மாற்றி அருள் கொடுக்கும் தூப்புல்

ஐயனே இருள்தருமா ஞாலத்துளிருந்து தம்மை விலக்க வேண்டும் என்று அவரிடத்தில் ஶரணம் புகுகிறார்.

**இரண்டாம் பத்துப் பாசுரங்களின் ஏற்றம்**

பதினொன்று முதல் இருபதாம் பாசுரங்கள் வரை ஸ்வாமியின் திருமுன்பே விளித்து சில விண்ணப்பங்களை பேசுகிறார். முதலில் தாம் பெரிய தவம்புரிய வல்லனல்லன் என்றும் தமக்கு ஆத்ம ரக்ஷாபரத்தை உபதேஶித்து மோக்ஷத்தை அளிக்க வல்லவர் ஸ்வாமியே என்றும், ஸ்வாமியின் கருணையின்றி தாம் உஜ்ஜீவிப்பதற்கு வேறுவழியில்லை என்றும் பேசுகிறார்.

பின்பு பதிமூன்று பதிநான்கு மற்றும் பதினைந்தாவது பாசுரங்களினால் தமது தாழ்ந்த நிலையினை வெளிப்படுத்தி தமக்கு வேறுகதி இல்லை என்றும் ஸ்வாமியே அடையப்படுபவர் என்றும் அவ்வாறு அடைவதினால் உண்டாகும் பயனும் ஸ்வாமி தேஶிகனே என்றும் அவர் திருவடிகளை அடைகிறார்.

பத்மாவதித் தாயரின் காதலனான திருவேங்கட வனின் அவதாரமான ஸ்வாமியே அந்த எம்பெருமான் விஷயத்திலும் பாகவதர்கள் விஷயத்திலும் தமக்கு பக்தியை ஏற்படுத்த வேண்டும் என்று மேலும் வேண்டுகிறார்.

பதினேழாவது பாசுரத்தில் தம்முடைய ப்ராசார்யரான அப்புள்ளாரிடம் உபய வேதந் தளையும் கசடற அதிகரித்து அவரிடம் மிகுந்த அன்பு கொண்ட தூப்புல் குலத்தரசே தம்மைக் காக்க வேண்டும் என்கிறார்.

அடுத்த பாசுரத்தில் கவிதார்க்கிக சிங்கமாகிய வேதாந்த தேசிகனை நோக்கி தமக்கு பாகவதர்களிடத்தில் பக்தியை செலுத்த அவரின் அருளே வேண்டும் என்று தாளும் தடக்கையும் கூப்பி வணங்குகிறார்.

விஷ்ணு கண்டாவதாரமான ஸ்வாமியின் தொண்டர்கள் போற்றும் துணையடிகளுக்கும், மந்தஸ்மிதமான திருமுகத்திற்கும், வ்யாக்யான முத்திரை கொண்ட திருக்கைகளுக்கும் ஸ்வாமியின் ஸமுதாய ஶோபையான திருமேனிக்கும் பல்லாண்டு பாடுகிறார் பத்தொன்பதாவது பாட்டில்.

**பாசுரங்களின் பலனின் ஏற்றம்**

இருபதாம் பாசுரத்தில் அந்த ஆசார்யோத்தமரின் ஸௌந்தர்ய திருமேனியில் விளங்கும் திருவடித் தாமரைகளில் ஸமர்பிக்கப்பட்ட இந்த தூப்புற்பிள்ளையந்தாதி இருபது பாசுரங்களையும் தினமும் ஓதுபவர்களுக்கு அந்த தூப்புல் தலைவனின் திருவடிகள் அவர்களின் சிரோபூஷணமாக விளங்கும் என்றும் அந்த ஆசார்யரின் திருவடி ஸம்பந்தத்தைத் தவிர வேறு பலனில்லை என்று இப்ப்ரந்தத்தை அழகாகத் தலைக்கட்டுகிறார்.

இவ்விளம்பி வருஷத்தில் ஸ்வாமி தேஶிகனின் 750-வது வருஷத்திலிருந்து தினமும் இவ்வளவு அர்த்த புஷ்டியுள்ள இந்த பிள்ளையந்தாதியை பாராயணம் செய்து அம்மஹாபுருஷனிடம் பக்தி செலுத்தி இம்மையிலும் மறுமையிலும் பயன் பெற்று மயிலையில் அருள்பாலிக்கும் பத்மாவதீ ஸமேத ஸ்ரீநிவாஸப்பெருமாளின் கருணைக்குப் பாத்திரமாகலாம்.

## புரட்டாசியில் முக்கிய உத்ஸவங்கள்

**ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தேசிகனின் 751-வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம்**

ஸெப்டம்பர் 12 (புதன்) முதல் 10 நாட்கள்
ஸெப்டம்பர் 20 (வியாழன்)
காலை - திருத்தேர்;
மாலை - ஸ்வாமி தேசிகனுக்கு திவ்யதேச எம்பெருமான்கள் ப்ரஸாத அநுக்ரஹம்
ஸெப்டம்பர் 21 (வெள்ளி)
**மங்களாசாஸநம், சாற்றுமுறை**

**திருப்பவித்ரோத்ஸவம்**
ஸெப்டம்பர் 24 (திங்கள்) முதல் 30 (ஞாயிறு) வரை 7 நாட்கள்

**நவராத்ரி உத்ஸவம்**
அக்டோபர் 10 (புதன்) முதல் 9 நாட்கள்
அக்டோபர் 18 (வியாழன்) **மஹா நவமி**
அக்டோபர் 19 (வெள்ளி) **விஜய தசமி**

**பேயாழ்வார் உத்ஸவம்**
அக்டோபர் 11 (வியாழன்) முதல் 10 நாட்கள்
அக்டோபர் 20 (சனி) **சாற்றுமுறை**

# விளம்பி வருட புரட்டாசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | |
|---|---|---|---|---|---|---|
| செப்டம்பர்/ அக்டோபர் | புரட் டாசி | | | | | |
| | | | | | | |
| 17.09.18 | 1 | அஷ்டமி | திங்கள் | கேட்டை | புரட்டாசி மாதப்பிறப்பு – தேசிகன் வார்ஷிக உத்ஸவம் – 6ம் நாள்; திருநக்ஷத்ரம் / சாற்றுமுறை 21.09.18 (வெள்ளிக்கிழமை) | |
| 02.10.18 | 16 | அஷ்டமி | செவ்வாய் | திருவாதிரை | ஸ்ரீபாஷ்யகாரர் | |
| 03.10.18 | 17 | நவமி | புதன் | புனர்வஸு | காலை – ராமர் திருமஞ்சனம் மாலை – ஆஸ்தானம் | |
| 04.10.18 | 18 | தசமி | வியாழன் | புஷ்யம் | திருமால்வடை | |
| 05.10.18 | 19 | ஏகாதசி | வெள்ளி | ஆயில்யம் | காலை – பெருமாள், தாயார் மூலவர், உத்சஸவர் திருமஞ்சனம் மாலை – பெருமாள் வீதி புறப்பாடு பின்பு தாயாருடன் உள் புறப்பாடு | ஸ்ரீ S.அருண் |
| 06.10.18 | 20 | த்வாதசி / த்ரயோதசி | சனி | மகம் | திருமழிசையாழ்வார் | |
| 07.10.18 | 21 | சதுர்த்தசி | ஞாயிறு | பூரம் | ஆண்டாள் | |
| 08.10.18 | 22 | சதுர்தசி (13.15) / அமாவாசை | திங்கள் | உத்திரம் | காலை – தாயார் உத்ஸவர் திருமஞ் சனம் – மாலை – தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீ S.V.S. ராகவன் பண்டு |
| 09.10.18 | 23 | அமாவாசை (9.22) / பிரதமை | செவ்வாய் | ஹஸ்தம் | காலை – பெருமாள் உத்சவர் திருமஞ்சனம் – மாலை – பெருமாள் வீதி புறப்பாடு | |
| 10.10.18 | 24 | த்விதீயை | புதன் | சித்திரை | நவராத்திரி உத்ஸவம் – 1ம் நாள் காலை பெருமாள், தாயார் திருமஞ் சனம் – மாலை – பெருமாள், தாயார் பத்தி உலாத்தல் | ஸ்ரீ சேஷாத்ரி |
| 11.10.18 | 25 | திருதீயை | வியாழன் | சுவாதி | நவராத்திரி உத்ஸவம் – 2ம் நாள் – பேயாழ்வார் உத்ஸவம் – 1ம் நாள் காலை – பேயாழ்வார் வீதி புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார் திருமஞ்சனம் மாலை – பெருமாள், தாயார் பத்தி உலாத்தல் – இரவு ஸேவாகாலம் | ஸ்ரீ K.R. ஸ்ரீநிவாசன் ** ஸ்ரீ பேயாழ்வார் உத்ஸவம் 10 நாட்களும் உபயதாரர் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 12.10.18 | 26 | சதுர்த்தி | வெள்ளி | விசாகம் | நவராத்திரி உத்ஸவம் – 3ம் நாள் பேயாழ்வார் உத்ஸவம் 2ம் நாள் காலை – பேயாழ்வார் வீதி புறப்பாடு பெருமாள், தாயார், பேயாழ்வார் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார் பத்தி உலாத்தல் – இரவு ஸேவாகாலம் | ஸ்ரீ D. சேஷாத்ரி – D. சுந்தர வரதன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13.10.18 | 27 | பஞ்சமி | சனி | அனுஷம் | நவராத்திரி உத்ஸவம் – 4ம் நாள் – பேயாழ்வார் உத்ஸவம் – 3ம் நாள் – காலை – பேயாழ்வார் வீதி புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார் பத்தி உலாத்தல் – இரவு ஸேவாகாலம் | ஸ்ரீ N.R.S. ராமகிருஷ்ணன் |
| 14.10.18 | 28 | ஷஷ்டி | ஞாயிறு | கேட்டை | நவராத்திரி உத்ஸவம் – 5ம் நாள் – பேயாழ்வார் உத்ஸவம் – 4ம் நாள் – காலை – பேயாழ்வார் வீதி புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார் பத்தி உலாத்தல் – இரவு ஸேவாகாலம் | ஸ்ரீ M.K. இராமசுவாமி குடும்பத்தினர் |
| 15.10.18 | 29 | ஸப்தமி | திங்கள் | மூலம் | நவராத்திரி உத்ஸவம் – 6ம் நாள் – பேயாழ்வார் உத்ஸவம் – 5ம் நாள் – காலை – பேயாழ்வார் வீதி புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார் பத்தி உலாத்தல் – இரவு ஸேவாகாலம் | P.D.R. டிரஸ்ட் c/o. ஸ்ரீ V. சேஷாத்ரி |
| 16.10.18 | 30 | அஷ்டமி | செவ்வாய் | பூராடம் | நவராத்திரி உத்ஸவம் – 7ம் நாள் பேயாழ்வார் உத்ஸவம் – 6ம் நாள் – காலை – பேயாழ்வார் வீதி புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார் பத்தி உலாத்தல் – இரவு ஸேவாகாலம் | ஸ்ரீ K.S. சேதுராமன் குடும்பத்தினர் |
| 17.10.18 | 31 | அதிதி | புதன் | உத்திராடம் | தேசிகன் 27ம் நாள் விடாயாற்றி நவராத்திரி 8ம் நாள் – பேயாழ்வார் 7ம் நாள் – காலை – பெருமாள், தாயார், பேயாழ்வார், தேசிகன் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார், தேசிகன் பத்தி உலாத்தல் – இரவு – ஸேவாகாலம் | ஸ்ரீ V. ராமபத்ரன் 27 ஆம் நாள் விடாயாற்றி ஸ்ரீ S.K. ஸ்ரீநிவாஸன் |
| 17.10.18 | 31 | அதிதி | புதன் | உத்திராடம் | தேசிகன் 27ம் நாள் விடையாற்றி நவராத்திரி 8ம் நாள் – பேயாழ்வார் 7ம் நாள் – காலை – பெருமாள், தாயார், பேயாழ்வார், தேசிகன் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார், தேசிகன் பத்தி உலாத்தல் – இரவு – ஸேவாகாலம் | ஸ்ரீ.V.ராமபத்ரன் 27 ஆம் நாள் விடையாற்றி ஸ்ரீ S.K. ஸ்ரீநிவாஸன் |

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:



*With Best Compliments from:*

# N. Seshadri & Family,

**Flat No.11, 'Lakshmi', 16, Justice Sundaram Road,**
**Mylapore, Chennai 600004.**

**SVDD thanks Sri N. Seshadri & Family,**
for sponsoring this month's special issue of Desika Sandesam



ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்

மயிலாப்பூர், சென்னை-600 004



## ஸ்ரீ வேதாந்த தேசிகன் 750வது திருஅவதார மஹோத்ஸவம்

| நாள் | நேரம் | உத்ஸவம் |
|---|---|---|
| 04.09.2018 (செவ்வாய்) | மதியம் 2:00 - 5:00 | ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் அசித் (வேத) பாராயணம் |
| 05.09.18 - 08.09.18 | மதியம் 3:00 - 6:00 | ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் அசித் (வேத) பாராயணம் |
| 08.09.18 (சனி) | காலை 8:30 | ஸ்ரீதேசிகன் மூலவர், உத்ஸவர் - 108 கலச விசேஷ திருமஞ்ஜனம் |
| 09.09.18 (ஞாயிறு) | காலை 8:00<br>மாலை 6:00<br>மாலை 6:30 | ஸ்ரீதேசிகன் ஸஹஸ்ரநாம அர்ச்சனை<br>ஸஹஸ்ர தீபாலங்கார ஸேவை<br>G.ராமநாதன் & குழுவினர் - சாக்ஸஃபோன் கச்சேரி |

| நாள் | காலை 6:30 மணி | உபசார உத்ஸவம் மாலை 6:00 மணி | இரவு 8:00 மணி |
|---|---|---|---|
| 11.09.18 (செவ்வாய்) | ----- | ----- | ஸ்வாமி தேசிகன் கண்ணாடியறை எழுந்தருளல் |
| 12.09.18 (புதன்) | பல்லக்கு | புஷ்ப யாகம் | யாளி வாகனம் |
| 13.09.18 (வியாழன்) | பல்லக்கு (முரளிகண்ணன் திருக்கோலம்) | தீப ஆராதனம் | சூர்ய ப்ரபை |
| 14.09.18 (வெள்ளி) | பெருமாள் தங்க கருடன், தேசிகன் தங்க கேடயம் | ----- | சிம்ஹ வாகனம் |
| 15.09.18 (சனி) | பல்லக்கு (பரமபதநாதன் திருக்கோலம்) | அன்னக்கூட உத்ஸவம் | சந்திர ப்ரபை |
| 16.09.18 (ஞாயிறு) | பல்லக்கு (நாச்சியார் திருக்கோலம்) | பலோத்ஸவம் | ஹம்ஸ வாகனம் |
| 17.09.18 (திங்கள்) | சூர்ணாபிஷேகம் (காலை 6:00)<br>பல்லக்கு<br>(வேணுகோபாலன் திருக்கோலம்) | டோலோத்ஸவம் | குதிரை வாகனம் |
| 18.09.18 (செவ்வாய்) | பல்லக்கு (காளிங்க நர்த்தன திருக்கோலம்) | ஹயக்ரீவர் ஆராதனம் (மதியம் 3:00 மணி) | மேனா பல்லக்கு (அக்ஷராப்யாச திருக்கோலம்) |
| 19.09.18 (புதன்) | பல்லக்கு (வெண்ணைத்தாழி கண்ணன் திருக்கோலம்) | புஷ்ப அலங்காரம் | யானை வாகனம் |
| 20.09.18 (வியாழன்) | திருத்தேர் | திவ்யதேச மரியாதைகள் | தங்க கேடயம் |
| 21.09.18 (வெள்ளி) | மங்களாசாஸனம் - காலை 5:00 மணி<br>பெருமாள், தேசிகன் - தேசிக பவனம், பலாத்தோப்பு எழுந்தருளல் - காலை 8:00 மணி<br>திருமஞ்ஜனம் - காலை 11:00 மணி<br>பத்தி உலாத்தல் - மாலை 6:00 மணி<br>ஒய்யாளி, திருப்பாவை சாற்றுமுறை, மங்களகிரி புறப்பாடு, திருவாய்மொழி சாற்றுமுறை (இரவு)<br>கந்தப்பொடி வஸந்தம் - (22.09.18 - காலை 7:00 மணி) | | |
| 01.10.18 (திங்கள்) | 10ம் நாள் விடையாற்றி உத்ஸவம் - புஷ்ப பல்லக்கு - மாலை 7:30 மணி | | |

இங்ஙனம் - R.முகுந்தன், P.சேஷாத்ரி, N.கஸ்தூரிரங்கன் - தர்மகர்த்தாக்கள்

ஸ்ரீ:

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# திருமயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகன் 750வது திருஅவதார மஹோத்ஸவ பத்திரிகை

ஏற்றி மனத்தொழில் ஞானவிளக்கை யிருளனைத்தும்
மாற்றினவர்க்கோர் கைம்மாறு மாயனும் காணகில்லான்
போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதம் பொங்குபுகழ்
சாற்றி வளர்பதுஞ் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே — ஸ்வாமி தேசிகன்

மாமயிலைப்பதியதனில் ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் ஸந்நிதியில் நாளது ஸ்ரீவிளம்பி வருஷம் ஆவணி மாதம் 27ம் தேதி (12.09.2018) புதன்கிழமை முதல் நடைபெறும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் **750வது திருஅவதார மஹோத்ஸவத்திற்கு** ஸகல ஆஸ்திகர்களும் எழுந்தருளி மேற்படி உத்ஸவத்தை சிறப்பித்து. ஆசார்ய ப்ரஸாதம் பெற்று ஆனந்தித்து அடியோங்களையும் தன்யராக்கும்படி ப்ரார்த்திக்கின்றோம். புரட்டாசி 05ம் தேதி 21.09.2018 வெள்ளிக்கிழமை ஸ்ரீவேதாந்த தேசிகன் சாற்றுமுறை நடைபெறும்.

R.முகுந்தன், P.சேஷாத்ரி, N. கஸ்தூரிரங்கன்
*தர்மகர்த்தாக்கள்*

## உத்ஸவ விபரம்/ நிகழ்ச்சி நிரல்

| நாள் | உற்சவம் | நேரம் | உபயதாரர் |
|---|---|---|---|
| 11.09.18 (செவ்வாய்) | ஸ்வாமி தேசிகன் கண்ணாடியறைக்கு எழுந்தருளல் | இரவு 8:00 | ஸ்ரீ. C.R. ராகவன் குடும்பத்தினர் |
| 12.09.18 (புதன்) | பல்லக்கு | காலை 6:30 | 1. ஸ்ரீ. T.C. ரங்கராஜன், 2. ஸ்ரீ ஆனந்த் ரங்கநாதன், 3. ஸ்ரீமதி லக்ஷ்மி ராமபத்ரன் |
| | யாளி வாஹனம் | இரவு 8:00 | Electoral Board |
| 13.09.18 (வியாழன்) | பல்லக்கு ***(முரளிகண்ணன் திருக்கோலம்)*** | காலை 6:30 | 1. ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு 2. ஸ்ரீ K. ராஜகோபாலன் |
| | சூர்யப்ரபை | இரவு 8:00 | 1. ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு 2. ஸ்ரீ V. ராஜகோபாலன் |
| 14.09.18 (வெள்ளி) | ஸ்ரீ பெருமாள் தங்க கருடன், ஸ்ரீ தேசிகன் தங்க கேடயம் | காலை 6:30 | 1. ஸ்ரீமதி பத்மா சாரங்கன் குடும்பத்தினர், 2. ஸ்ரீ P. ஸ்ரீநிவாஸராகவன் குடும்பத்தினர் 3. ஸ்ரீ. ராமரத்னம் ஐயங்கார் |
| | சிம்ஹ வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ S.R.R. ஆசார்யா குடும்பத்தினர், 2. ஸ்ரீ T.P. பத்மநாபன் |
| 15.09.18 (சனி) | பல்லக்கு ***(பரமபதநாதன் திருக்கோலம்)*** | காலை 6:30 | 1. ஸ்ரீ.R. வெங்கடேஷ், 2. ஸ்ரீமதி ஸ்ரீநிவாஸன் |
| | சந்திரப்ரபை | இரவு 8:00 | 1. ஸ்ரீ T.T. ரகுராம், 2. ஸ்ரீ குஞ்சிதபாதம் |
| 16.09.18 (ஞாயிறு) | பல்லக்கு ***(நாச்சியார் திருக்கோலம்)*** | காலை 6:30 | 1. ஸ்ரீ V.A. ரகு குடும்பத்தினர், 2. ஸ்ரீ S.T. ராகவன் குடும்பத்தினர் 3. ஸ்ரீமதி கனகம்மாள் பண்டு |
| | ஹம்ஸ வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி, 2. ஸ்ரீ A. நரஸிம்மன் |
| 17.09.18 (திங்கள்) | சூர்ணபிஷேகம், பல்லக்கு ***(வேணுகோபாலன் திருக்கோலம்)*** | காலை 6:00 காலை 6:30 | 1. ஸ்ரீ V.P. ப்ரேம் குமார் 2. ஸ்ரீமதி P.R. விஜயலக்ஷ்மி பண்டு |
| | குதிரை வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் 2. ஸ்ரீமதி ரமாமணி ராஜகோபாலன் |

ஸ்ரீ:

| நாள் | உற்சவம் | நேரம் | உபயதாரர் |
|---|---|---|---|
| 18.09.18 (செவ்வாய்) | பல்லக்கு ***(காளிங்கநர்த்தன திருக்கோலம்)*** | காலை 6:30 | 1. ஸ்ரீ V.R. ராஜகோபால், 2. ஸ்ரீ V. கண்ணன் |
| | ஸ்ரீ ஹயக்ரீவ ஆராதனம் | மதியம் 3:00 | ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி பரகாலமடம், மைசூர் |
| | மேனா பல்லக்கு ***(அக்ஷராப்யாச திருக்கோலம்)*** | இரவு 8:00 | 1. ஸ்ரீ N. நாராயணன் ராம்ஜி,<br>2. ஸ்ரீ சஞ்ஜீவ் செல்லப்பா, 3. ஸ்ரீ P.R. ராமாநுஜம் |
| 19.09.18 (புதன்) | பல்லக்கு ***(வெண்ணைத்தாழி கண்ணன் திருக்கோலம்)*** | காலை 6:30 | 1. ஸ்ரீ மாடபூசி சுதர்ஸனம் ஐயங்கார் பண்டு<br>2. ஸ்ரீ S.S. ராகவன் |
| | யானை வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ G. வாசுதேவன், 2. ஸ்ரீ T.V. ராமாநுஜம் |
| 20.09.18 (வியாழன்) | திருத்தேர் திருத்தேருக்கு எழுந்தருளல் | | *காலை 3.00 - 3.30 மணி (கடக லக்னம்)* |
| | திருத்தேர் புறப்பாடு | காலை 7:30 | ஸ்ரீ ஸ்ரீநிவாஸ கைங்கர்ய ஸபா |
| | தங்க கேடயம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ N.S. கண்ணன், 2. ஸ்ரீ C. கிருஷ்ணன் |
| 21.09.18 (வெள்ளி) | ஸ்ரீ தேசிகன் *சாற்றுமுறை* மூலவர் திருமஞ்ஜனம் | | தேவஸ்தானம் |
| | மங்களாசாஸனம் | காலை 5:00 | 1. ஸ்ரீ S. வரததேசிகன் & ஸ்ரீ V. வெங்கடேஷ் |
| | ஸ்ரீ பெருமாள், ஸ்ரீ தேசிகன் பலாத்தோப்பு எழுந்தருளல் | காலை 8:00 | வனபோஜனம் ட்ரஸ்ட் |
| | திருமஞ்ஜனம் | | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு) |
| | பத்தி உலாத்தல் | மாலை 6:00 | |
| | ஒய்யாளி, திருப்பாவை சாற்றுமுறை, மங்களகிரி புறப்பாடு, திருவாய்மொழி சாற்றுமுறை | இரவு | |
| 22.09.18 (சனி) | கந்தப்பொடி வஸந்தம் | காலை 7:00 | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு) |
| | விடையாற்றி உத்ஸவம் முதல் நாள் – திருமஞ்ஜனம் | மாலை 4:30 | ஸ்ரீமதி சுபத்ரா பாலாஜி குடும்பத்தினர் |
| 23.09.18 (ஞாயிறு) | விடையாற்றி உத்ஸவம் இரண்டாம் நாள் – திருமஞ்ஜனம் | காலை 10:00 | ஸ்ரீ S. சுந்தரம் |
| 01.10.18 (திங்கள்) | விடையாற்றி உத்ஸவம் 10ம் நாள் – திருமஞ்ஜனம் | காலை 10:00 | 1. ஸ்ரீ P. கோபால்ஸ்வாமி ஐயங்கார் பண்டு |
| | புஷ்ப பல்லக்கு | இரவு 07:30 | ஸ்ரீ. உ.வே. பி.வி.ராகவன் (பண்டு)<br>ஸ்ரீ. மதுதேசிகன் குடும்பத்தினர் |
| 17.10.18 (புதன்) | விடையாற்றி உத்ஸவம் 27ம் நாள் – திருமஞ்ஜனம் | காலை 10:00 | 1. ஸ்ரீ S.K. ஸ்ரீநிவாஸன், |

**Note:** 1. CONTRIBUTIONS, IF ANY, CAN BE MADE BY WAY OF CASH OR CHEQUE (in favour of Sri Vedantha Desikar Devasthanam)

2. Those who have not updated their contact details like mobile number, E-mail ID are requested to update the same, in order to ensure frequent and speedier communication.

ஸ்ரீ:

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# திருப்பவித்ரோத்ஸவ பத்திரிகை

**பசலி 1428 – ஸ்ரீவிளம்பி வருஷம் – 2018**

## 24.09.2018 முதல் 30.09.2018 வரை

ஶ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அர்ச்சாரூபியாய், அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பனாய் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய, ஸ்ரீபேயாழ்வார் அவதாரஸ்தலமுமாயும், தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனைக் கொண்டு அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய திருமயிலையில் எழுந்தருளியிருப்பவனுமான ஸ்ரீதிருவேங்கடமுடையான் நாளது ஸ்ரீவிளம்பி வருஷம் புரட்டாசி மாதம் 8ம் தேதி (24.09.2018) திங்கட்கிழமை முதல் பவித்ரோத்ஸம் ஆரம்பித்து நடத்திக் கொள்வதாக ஸங்கல்பித்துக் கொண்டிருக்கிறான்.

மேற்படி உத்ஸவத்தில் வேதபாராயணம், அத்யாபகம், க்ரந்த பாராயணம் ஆகிய கைங்கர்யங்களில் ஸ்வாமிகள் அன்வயிக்கவும், ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் கைங்கர்யபரர்களாயிருந்து, மாமயிலை திவ்யதம்பதிகள், ஸ்ரீபேயாழ்வார் மற்றும் ஸ்வாமி தேசிகனின் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாக வேணுமாய் ப்ரார்த்திப்பதோடு, இவ்வருடம் இன்னும் ப்ரபல்யமாய் இப்பரம பாவனமான உத்ஸவத்தை நடத்தி வைக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

அங்குரார்ப்பணம் – 22.09.2018 – சனிக்கிழமை மாலை
அதிவாஸம் – 23.09.2018 – ஞாயிற்றுக்கிழமை மாலை
தினசரி ஹோமம் – காலை 8:00 மணி மற்றும் இரவு 8:30 மணி
மஹாபூர்ணாஹுதி – 30.09.2018 – ஞாயிற்றுக்கிழமை
பிரதி தினம் மாலை 6.15 மணிக்கு பெருமாள், தேசிகன் திருவீதி புறப்பாடு

R. முகுந்தன், P. சேஷாத்ரி, N. கஸ்தூரிரங்கன்
*தர்மகர்த்தாக்கள்*

| நாள் | காலை உத்ஸவ உபயம் | காலை ததீயாராதனை உபயம் | மாலை உத்ஸவ உபயம் | மாலை ததீயாராதனை உபயம் |
|---|---|---|---|---|
| 22.09.18 (சனி) | அங்குரார்ப்பணம் (மாலை)<br>ஸ்ரீ சேனைநாதன் புறப்பாடு | —— | ஸ்ரீ. K.L.ராமதுரை | —— |
| 23.09.18 (ஞாயிறு) | அதிவாஸம் (மாலை) | —— | அத்திகிரி அருளாளன் | —— |
| 24.09.18 (திங்கள்) | ஸ்ரீமதி K.R. சித்ரா கிருஷ்ணஸ்வாமி | 1. ஒலக்கூர் ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸன்<br>2. ஸ்ரீ S. ரவிச்சந்திரன் | ஸ்ரீ N.S. பார்த்தஸாரதி | 1. ஸ்ரீ K. ராஜகோபாலன்<br>2. ஸ்ரீ N.சேஷாத்ரி |
| 25.09.18 (செவ்வாய்) | 1. ஸ்ரீமதி ஜானகியம்மாள் பண்டு<br>2. ஸ்ரீ S.பத்மநாபன் | ஸ்ரீ K.R. ராமஸ்வாமி<br>ஸ்ரீ R. பார்த்தஸாரதி | 1. ஸ்ரீ P.V. ராகவன் (பண்டு)<br>2. ஸ்ரீ மதுராந்தகம் ஸ்ரீனிவாசன் | 1. ஸ்ரீ N.S. வரதாச்சாரி<br>2. ஸ்ரீ. நந்தகுமார் |
| 26.09.18 (புதன்) | ஸ்ரீமதி பத்மா ராமானுஜம் | ஸ்ரீ S.V.S. ராகவன்<br>ஸ்ரீ. R. ராமக்ருஷ்ணன் | ஸ்ரீ A.N.S. சுந்தரம் | 1. ஸ்ரீ A.N.S. சுந்தரம்<br>2. ஸ்ரீ L.V. நரஸிம்மன் |
| 27.09.18 (வியாழன்) | ஸ்ரீ T.V. நரஸிம்மன் | 1. ஸ்ரீ D. சுந்தரராஜன்,<br>2. ஸ்ரீமதி D.சுஜாதா | ஸ்ரீ Dr. E. ஸ்ரீனிவாசன் | 1. ஸ்ரீ T.M. ரவி நரஸிம்மன்<br>2. ஸ்ரீ M.P. ராஜா |
| 28.09.18 (வெள்ளி) | ஸ்ரீ S. அருண் | ஸ்ரீ M.D. சுதர்ஸனம் ஐயங்கார் (பண்டு)<br>ஸ்ரீமதி ப்ரேமா பார்த்தஸாரதி | ஸ்ரீ N.K. ரங்கஸ்வாமி ஐயங்கார் குடும்பம் | 1. ஸ்ரீ R. சம்பத்,<br>2. ஒலக்கூர் ஸ்ரீ R. ராஜகோபாலன் |
| 29.09.18 (சனி) | ஸ்ரீ S. சத்யநாராயணன் &<br>ஸ்ரீ N.கேசவன் | ஸ்ரீ V.J. பார்த்தஸாரதி<br>ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா | 1. சுமைதாங்கி கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் குடும்பத்தினர்<br>2. ஸ்ரீமதி R. மஹாலட்சுமி | ஸ்ரீ T.M. ராஜகோபாலன்<br>ஸ்ரீ. R. முகுந்தன் |
| 30.09.18 (ஞாயிறு) | 1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust<br>2. கீழ்ச்சேரி ஸ்ரீ S. ராகவன் | ஸ்ரீ P.D. ராமஸ்வாமி ஐயங்கார் ட்ரஸ்ட் | 1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust<br>2. ஸ்ரீ. வஸந்த் ஷான்பாக் பூர்ணாஹூதி திருமஞ்ஜனம் ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி | ஸ்ரீ P.D. ராமஸ்வாமி ஐயங்கார் ட்ரஸ்ட் |

பட்டு பவித்ரங்கள் உபயம் : Dr. திலீப் க்ருஷ்ணா; ப்ரதி தினம் காலை, மாலை க்ஷீர கைங்கர்யம் உபயம் : ஸ்ரீமதி ஹேமலதா ரமாமணி

CONTRIBUTIONS IN KIND / CASH ARE WELCOME



ஸ்ரீஜயந்தீ உறியடி உத்ஸவம்







ஸ்ரீ வேதாந்த தேசிக ஸஹஸ்ரநாம அர்ச்சனை







ஸ்ரீ:









ஸ்ரீ வேதாந்த தேஶிகன் ஸஹஸ்ர தீப அலங்கார ஸேவை



ஸ்ரீ:



ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஸஹஸ்ர தீப அலங்கார ஸேவை







ஸ்ரீ:

கண்ணுக்கினியன



ஶ்ராவண அத்யயந ஹோமம்





ஸ்ரீ தேஶிகன் வார்ஷிக உத்ஸவ பந்தல்கால் முஹூர்த்தம்



ஸ்வாமி தேஶிகன்
வார்ஷிக உத்ஸவத்திற்காக
கண்ணாடி அறைக்கு எழுந்தருளல்



தேஶிகன் உத்ஸவம் - பெருமாள் கருடவாஹன ஸேவை








**தேஶிகன் உத்ஸவம் - பெருமாள் கருடவாஹன ஸேவை**







**ஸ்வாமி தேஶிகனுக்காக ஸமர்ப்பிக்கப்பட்ட நூதன தங்க ➲ ஸிம்ஹாஸனத்தில் முதலில் திவ்ய தம்பதிகள் எழுந்தருளி அநுக்ரஹம்**










ஸ்வாமி தேஶிகன் விஷயமாக
உபந்யாஸத் தொடரிலிருந்து...

















ஸ்வாமி தேஶிகன் விஷயமாக
உபந்யாஸத் தொடரிலிருந்து...













ஆவணி (கடை) ஶ்ரவண உத்ஸவம்









அஶீதி பாராயணம்

ஸ்ரீ:

# Hail To Vedantha Desika – Master Of All Arts

Sri U.Ve. Natteri Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Even as this writer set out to script a small tribute to **Sri Vedantha Desika,** an idea flashed through the mind to catch a glimpse of the pre-eminent attributes of the Acharya. This led the thought to the first verse of Nyaasa Vimsathi where he enumerates 14 qualities of an ideal Acharya. Lo and behold, the name Vedantha Desika too has 14 letters and why not try and see if each of them connects with an attribute of the illustrious Acharya!



**V**ersatile
**E**rudite
**D**istinguished
**A**ustere
**N**oble
**T**owering
**H**umble
**A**we-inspiring
**D**ivine
**E**loquent
**S**upreme
**I**mpeccable
**K**nowledgeable
**A**dhering

We shall briefly see how aptly these adjectives depict Swami Desika. It can be observed that the four principal qualities – Jnaanam, Anushtaanam, Vairaagyam and Aathma Gunam which roughly translate into Knowledge, Adherence, Austerity and Nobility – are very much there in the above list in their adjective forms.

It is an interesting coincidence that the very first attribute, in a way, denotes 'Sarva-thanthra Swathanthra' (Master Of All Arts), the greatest of his honours, though the original title can never be equated.

**1. Versatile**

Swami Desika's excellence in philosophy and literature oozes in his innumerable works. But what is flabbergasting is he was endowed with mastery in other art forms and crafts like architecture (as in building a well at Thiruvaheendrapuram which exists even now), magic (humbling a magician), snake-charming (getting the better of one such practitioner by composing Garuda Panchasath), sculpting (carving out his own Vigraha), and so on. This is versatility at its best and that is why he is the one and only 'Sarva-thanthra Swathanthra'.

**2. Erudite**

By the time he turned 20, Sri Desika had mastered all Sasthras from his maternal uncle Kidambi Appullaar and even completed Sribhashya Kaalakshepam to 30 eligible students. His effortless conquering of competing scholars belonging to other philosophies – be it Krishna Misra, Dindima or the one from our own Sampradayam who challenged our Acharya to compose 1000 verses overnight, to name a few – bears testimony to his scholarship.

**3. Distinguished**

The most revered Acharya after Sri Ramanuja, Swami Desika has an unmatched eminence and commanding stature. His initiation into Hayagriva Manthram by Sri Garuda and the titles he received from Lord Ranganatha (Vedanthacharya) and Periya Piraatti (Sarva-thanthra Swathanthra) puts him in an exalted pedestal. The last-named honour, a unique one, means he could literally do anything under the Sun.

**4. Austere**

Swami Desika is an epitome of austerity as evident in his hymn Vairagya Panchakam.

One Vidyaranya, an Advaitin and a boyhood friend who was a court scholar and spiritual preceptor in the Vijayanagara kingdom, came to know about the Uncha Vrutthi way of life Swami Desika was so assiduously following and the dire straits he was in. He wanted to help his friend and sent an invitation to adorn the court of Harihara and Bukka, the emperors.

Here was fortune presenting itself in the face even as Sri Desika was living in utter penury in Kanchi. He could have helped himself to court honour and a hefty bounty, which were there for the asking, if he wished so. Would anyone have the guts and gumption to turn down such a golden opportunity? No, not ordinary mortals, really.

But how did our great Acharya respond? He simply wrote and sent out a sloka to Vidyaranya, categorically declining the offer while making it absolutely clear that he was not a wee bit interested in worldly riches. He stressed that according to him, the real treasure was Lord Krishna Himself, who turned His friend Kuchela into a Kubera in a trice.

Asceticism or austerity cannot be exemplified in a better manner.

**5. Noble**

Another incident and the birth of another hymn highlight this trait of Swami Desika.

There was a poor bachelor Brahmana who was in need of money for his marriage. He approached our Acharya and explained to him his plight and sought his help. But what could our Acharya do, as he himself was not financially sound! However, he wanted to help the groom-would-be, but how?

He had the great and indestructible wealth of unmatched poetic skills and unflinching devotion. He set about composing Sri Sthuthi, addressing Goddess Lakshmi. Animated verses started pouring in like the rain and so were golden coins all over the place, like a magic. The bachelor could not believe his eyes even as he was overwhelmed by ecstasy and astonishment. Swami Desika asked him to take them all and sent him off, wishing him well.

An anecdote related to the composition of Sudarsana Ashtakam illustrates the compassion and concern our Acharya had for humanity. Once the inhabitants of ThirupPut Kuzhi, a Divyadesam near Kancheepuram, were bearing the brunt of a dreadful epidemic called 'Vaisuri'. The disease was spreading rampantly and heading towards unmanageable proportions when Swami Desika authored this

hymn and relieved people of their misery.

**6. Towering**

Swami Desika, as An Acharya, led by example and showed the way to the followers -- just as a light house would. A defining incident when he was in Kancheepuram reflects this.

There was a period when Divya Prabandham was not given its due. The prime argument was that the Azhwars originated from different sects — most of them from the lower rungs of the Varna hierarchy — and hence their works lacked sanctity. The detractors of Aruli-cheyal ensured discontinuance of its recitation at Lord Varadaraja's temple. Our Acharya had to intervene and restore the tradition.



He established that Divya Prabandham is as sacred as the Vedas as Azhwars were manifestations at the behest of the Lord Himself. Fittingly, he salutes the scholars of both disciplines in his Prabandham Meiviratha Maanmiyam, saying "தொண்டை மண்டல வேதியர் வாழவே, தூய தென்மறை வல்லவர் வாழவே !"

At a later time, our Acharya repeated the feat of restoring the glory of Divya Prabandham at the Srirangam temple also.

**7. Humble**

In spite of his extra-ordinary talent and proficiency in multifarious fields, Sri Desika practised utmost modesty. He, in fact, was one who preached what he practised. This quality is brought forth umpteen times in his works. Sample these:

In Sloka No. 30 of Daya Sathakam, the author calls himself the 'emperor of sins' and addresses Daya Devi as the 'monarch of all virtues'. "Knowing this well, you must redeem me by placing me at the feet of Lord Srinivasa", he pleads with Her. Unparalleled humility from a gem of an Acharya!

Revealing genuine modesty in verse number 104 of the same hymn, our Acharya says that he is a child and unqualified to compose a hymn like this. But the Lord's playfulness has resulted in his elevation to the stature of 'Vedanthacharya'. It is really He who composed this hymn through him and that he is only an instrument like the Veena. (Can it take the credit for the melodious music that pours from it? Is it not the player that actually creates the melody?)

In the final Paasuram of Adhikaara Sangraham, he submits, referring to the Prabandham, that what Lord Hayagriva had written in his heart, he was simply putting on the leaf.

Moving expressions of humility, indeed.

**8. Awe-inspiring**

Even scholars of other faiths have conceded that it is impossible not to get awe-struck by the remarkable appeal his works make for, his mastery over the nuances of the languages (whether Sanskrit, Tamil, Manipravaalam or Praakrutham) and the sheer volume and range of his works numbering over 120.

It is not often that quality and quantity go along well, but in our Acharya's case it would seem that they had to strike a peace treaty so as to forge an awesome combination.

**9. Divine**

Nothing can be more divine than his hymns and Prabandhams. These are unique in form and substance. They are the outpourings of a pious and devoted heart in all its earnestness. Devotion is the nucleus of these works, and humility, the hallmark. His commitment to the philosophy born out of an unassailable conviction is written all over them.

**10. Eloquent**

Sri Desika was never one to mince words when the situation warranted. In a classic case, he declares in the 41st Sloka of Yathiraja Sapthathi: “I bear the lotus foot of the noble followers of Sri Ramanuja on my bowed head forever. By the same token, let it also be known that my left foot will be placed on the head of those with a raging madness in espousing the cause of other schools of philosophy." Can anything be more categorical and daring than this?

**11. Supreme**

Swami Desika is an incarnation of the Divine Bell (of the Lord of Thirumala), a fact well corroborated by his incredible, multi-faceted genius which manifested in the form of an astounding array of literary treasure. Having the Garuda Manthra imparted by Appullaar, Sri Desika got the Hayagriva Manthra Upadesam from Garuthmaan himself. Hence, there is little wonder that he stayed at the peak of his prowess in practically everything he did. Numero uno. all the way…

**12. Impeccable**

It is no exaggeration to say that Swami Desika perfected the art of perfecting. As a matter of routine, he set the highest standards in his works and maintained them throughout. His skills of poesy are flawless and to maintain that for an expansive gamut of composing takes some doing. As many as 22 varieties of metres cover his 862 Slokas in 28 Sthothras.

**13. Knowledgeable**

A favourite beneficiary of Hayagriva’s blessings, Sri Desika’s vastness and depth of knowledge are a given, and he was a repository of wisdom. Still he resolves to triumph over scholars of other ideologies and establish Sri Ramanuja’s philosophy by taking recourse to a personal application to Lord Hayagriva.

He says in Sloka 28: “O Lord, May You be seated on the throne — that is, the tip of my tongue — for, I am desirous of conquering the best of poets and logicians in philosophical debates presided over by profound scholars!” And, sure he did, ever so emphatically.

**14. Adhering (to Saasthras and Sampradaya)**

‘Anushtaanam’ is an important quality and Swami Desika is known to be a stickler for the same. He followed the Saasthraas to the hilt and undertook the ‘Uncha Vrutthi’ life as has been prescribed in Saasthras. He practised the five-session life style (Abhigamanam, Upaadhaanam, Ijya, Swaadhyaayam and Yogam) with unwavering commitment.

Based on traditional scriptures, he lays down strictest disciplines with respect to food in his Prabandham ‘Aahaara Niyamam’, an Anushtaana Grantham.

With the kind of exceptional intellect at his command, Sri Desika could have easily carved a niche for himself. But the fact that he chose to steadfastly and unerringly tread the path of Sri Ramanuja and other Poorvacharyas underlines his noble nature and this deserves adulation of the highest order.

It is our great fortune that we live at an era when the illustrious Acharya's 751st birth anniversary is being celebrated with utmost fervour wherever Sath Sampradaya devotees are there across the globe. Let us join the same with total devotion to the Acharya and receive his abundant grace.

## தேஶிக மொழி

**காயத்ரீ ஜபத்தின் நடுவில்**

ஜபத்தின் நடுவில் குருவோ, வைஷ்ணவர்களோ எவரேனும் வந்துவிட்டால் மௌனத்தை விட்டு அவர்களுடன் குஶலப்ரஶ்னம் செய்து முக்கியமான வார்த்தைகளைப் பேசி, அவர்களுக்கு உசிதமானபூஜையைச்செய்து, அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அவர்கள் கேட்டவற்றுக்குப் பதில் சொல்லிவிட்டு, மன அமைதியுடன், விட்டதற்குமேல் ஜபத்தை செய்யவும்.

**ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷை**

ஸ்ரீ:

# ஸ்ரீ வேதாந்த தேஶிக திவ்ய ஸஹஸ்ரநாமம்

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்ய நாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

'ஸ்துதி' என்றால், குணங்களையிட்டு வாய்மொழியாக அடியவரால் புகழப் படும் கீதம் எனப்பொருள். பொதுவாக எம்பெருமானை அடியவர்கள் இவ்விதம் ஏற்றுவர். இதில் ப்ரஸித்தமானது ஸ்ரீவிஶ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்.

'உங்கள் கருத்துப்படி, தர்மங்களிலே மிக உயர்ந்தது எது?' என்ற யுதிஷ்டிரரின் கேள்விக்கு, அம்புப் படுக்கையில் கிடந்த பீஷ்ம பிதாமஹர், 'பக்தியுடன் எப்போதும் புண்டரீகாக்ஷனான எம்பெருமானை ஒருவன் துதிப்பதும்-அர்ச்சிப்பதுமே அனைத்திலும் சிறந்த தர்மம், என்பதாக நான் கருதுகிறேன்' என்றார்.



மேலும் இதன் முறையையும்/ பலனையும் விளக்கும்போது, 'அனைத்து பாபங்களையும் அதனால் உண்டாகும் ஸம்ஸார பயத்தையும் போக்குவதான, எந்த விஷ்ணுவின் குண நலன்களைச் சொல்லும் ஆயிரம் நாமங்களை வேதவ்யாஸர் அடுக்கினாரோ; ரிஷிகளும் / பெரியோர்களும் பாடும் அவற்றைச் சொல்கிறேன்' எனத்தொடங்கி உபதேசித்தார்.

இவ்வளவால்,ஸ்தோத்ரம் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு :

- உயர்ந்தோனைக் குறித்து அமைய வேண்டும்;
- அவன் அடியார்களால் பாடப்படவேண்டும்;
- அவனுடைய குணநலன்களைப் பட்டியலிட வேண்டும்;
- ஸாம்ஸார பயம் நீங்கும் நோக்கத்துடன் செய்யப்படவேண்டும்,

என இலக்கணம் இட்டதாக ஆகிறது.

இப்போது 'தேஶிகதிவ்ய ஸஹஸ்ரநாமத்துக்கு' வருவோம். இது என்ன, கேள்விப்படாததாக இருக்கிறதே? எனக் கேட்டால், 'தவறு, அதனுடையதல்ல; நம்முடைய பாபவிஶேஷமும், அதனால் உண்டான அறியாமையும்தான்' என்பதுதான் விடையாகும்.

ஸரி, ஸ்தோத்ரத்துக்கான லக்ஷணங்கள் இதற்குப் பொருந்தியிருக்கிறனவா எனப் பார்ப்போம் -

- ஸ்வாமிதேஶிகன், இதன்கதாநாயகன். அவரோ திருமலைமால் திருமணியின் அவதாரம்; புண்டரீகாக்ஷ யஜ்வாவின் திருப்பேரர் (பீஷ்மர், புண்டரீகாக்ஷனை துதிப்பதே சிறந்ததர்மம்எனச்சொன்னதை, நினைவில் கொள்ளவும்); நடாதூர் அம்மாளால் 'எதிர் காலத்தில் வேதாந்தத்தை நிலைநாட்டி, புற மதங்களை விரட்டப் போகின்றவன்' என அநுக்ரஹிப்பட்டவர்; கிடாம்பி அப்புள்ளாரால் கிளிபோல் பிழையறப் பேச பழக்கிவைக்கப்பட்டவர்; அனைத்து ஶாஸ்த்ரங்களையும் கற்று, தன் இருபதாவது வயதுக்குள் உரியவர்க்கு, முப்பதுமுறை ஸ்ரீபாஷ்ய-காலக்ஷேபம் ஸாதித்தவர்; ஆசார்ய லக்ஷணமான 'அத்யாத்ம க்ரந்த நிர்மாண'த்தைப் பொறுத்தவரை, 120-க்கும் மேலான நூல் களை ஸாதித்தவர்; எப்போதும், ஸ்ரீபாஷ்யகாரரின் நூல்களை வாசித்து ரஸிப்பதிலேயே வாழ்நாளை செலவிட்டவர்; பெரிய பெருமாளால் 'வேதாந்தாசார்யர்' எனவும்/ பெரிய பிராட்டியால் 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்' எனவும்/ ஸ்ரீவைஷ்ணவர்களால் 'கவிதார்க்கிக ஸிம்ஹம்' எனவும் பிருது வழங்கப்பட்டவர் - இவ்வளவு போதுமா அவர்தம் உயர்வைப் பேச!
- இந்த ஸஹஸ்ரநாமம், ஸ்ரீபாஷ்யகாரரின் மறுஅவதாரம் என உத்ப்ரேக்ஷிக்கப்படும் 'ஸ்ரீ ஸாக்ஷாத்ஸ்வாமி' எனப்படும் ஸ்ரீ வேதாந்தராமாநுஜ மஹாதேஶிகனின்

ப்ரதான சீடரான 'திருக்குடந்தை தேஸிகன்' எனப்படும் 'ஸ்ரீகோபாலார்ய மஹாதேஸிக'னால் பக்தி-ப்ரகர்ஷத்தால் அருளிச்செய்யப்பட்ட ஸ்தோத்ரமாகும்.

- இதில், ஸ்வாமி தேஸிகனின் அவதார வைபவம் முதற்கொண்டு அவர் சரித்ரத்தையும், முக்கியமாக தாம் ஆசார்யர் என நிரூபித்த அவர் அருளிச்செய்த க்ரந்த-விஷயச் சுருக்கமும், இவைகளே அவர் குணநலன்கள் என்னலாம்படி பேசப்பட்டிருக்கின்றன.
- கதாநாயகனின் பெயர் 'வேங்கடநாதன்' என்பது. இதன் பொருள், 'வினைகளை அறுப்பவன்' என்பதாம். புகழ்வோரின் நோக்கமான வினை தீர்வது என்பதற்கு, இந்த 'வேங்கடவனை'விட எவர்தாம் பொருத்தமாக அமைவர்!

இவ்விதமாக, இந்த ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்தின் பழமையையும்/ பெருமையையும் பேசினோம். இருந்தும், 'இது புதியது' என்ற முத்திரை, நம் மனதைவிட்டு அகலவில்லை எனில், ஸ்வாமி தேஸிகனின் 750-வது ஆண்டு விழாவில், வித்யாஸமாக/ புதிதாக ஏதாவது செய்யவேணும் எனும் உந்துதலே, இந்த பழைய ஸ்தோத்ரத்துக்குப் புத்துயிர் அளிக்கக் காரணமாயிற்று.

இனியும் இதனை 'புதிதாக' வைத்திராமல், 'பழையதாக' ஆக்க வேண்டியது நம் பொறுப் பாகும். இது தொடங்கி, ஒவ்வொரு மாத திருநக்ஷத்ரமான திருவோணத்தன்று, இத்திவ்ய ஸஹஸ்ரநாமத்தால் அவரை அர்ச்சித்து, நம் கைம் மாறை அறிவித்து, ஸ்வரூபம் பெறுவோம்!

ஒவ்வொரு திருநாமமும் ஒவ்வொரு தீபமோ என்னலாம்படி, ஸஹஸ்ரதீப அலங்காரமும் செய்வது, அனைத்து பாலர்களையும் இத்தர்ம கைங்கர்யத்தில் ஈடுபடுத்தும் செயலாக அமையும்!!

''என்னைக் காட்டிலும், என்னுடைய பக்தர்களும்/ அவருடைய பக்தர்களும் பூஜிக்கப் படுவதே, எனக்கு உகப்பு'' என அறிவித்த திருவேங்கட முடையானின் ப்ரீதிக்குப் பாத்ரமாவோம்!!!

## பவித்ரோத்ஸவத்தின் சிறப்பு

பகவானுக்கு குறிப்பிட்ட மாதங்களில் என்னென்ன உத்ஸவங்கள் நடத்திவைக்க வேண்டும் என்று ஆகமங்களில் சொல்லப்பட்டு இருக்கிறது. வஸந்தோத்ஸவம், கோடை உத்ஸவம், ஜலக்ரீடோத்ஸவம், தவநோத்ஸ்வம், ப்லவோத்ஸவம், ஜ்யேஷ்டஸ்பநோத்ஸவம், ஸ்வாபோத்ஸவம், பவித்ரோத்ஸவம் ஆகியவை இவற்றில் அடங்கும்.

பவித்ரோத்ஸவமானது, சதுர்மாஸ்யத்தில் (அதாவது, ஆடி முதல் கார்த்திகை வரை ஏதாவது ஒரு மாதத்தில்) சுக்ல பக்ஷ தசமி, ஏகாதசி, பௌர்ணமி இவைகளில் ஒன்றில் ஆரம்பித்து 3, 4 அல்லது 7 நாட்கள் பண்ணப்பட வேண்டும்.

பவித்ரோத்ஸவம் நடத்துவது எதற்கு என்றால், ஒரு வருஷதிற்குள் செய்யவேண்டிய பூஜை முதலியவற்றைச் செய்யாவிட்டாலும், சரியாகப் பண்ணாவிட்டாலும் ஏற்படும் தோஷங்களைப் போக்கி அந்தந்த கர்மாக்கள் முழுமையாக, சரியாக நடந்ததாகச் செய்வதற்கே ஆகும்.

'ப' என்றால் 'தோஷம்', 'வி' என்றால் 'விசேஷமாக', 'த்ர' என்றால் 'காப்பாற்றுவது'. எனவே 'தோஷங்களிலிருந்து விசேஷமாக ரக்ஷிப்பது' எனப் பொருள்படுகிறது.

மிகவும் விசேஷமான இந்த பவித்ரோத்ஸவத்தில் எம்பெருமானையும், ஆசார்யர்களையும், ஹோமங்களையும், உபய வேத, இதிஹாஸ, க்ரந்த பாராயண கோஷ்டிகளையும் ஒருசேர வலம் வந்து ஸேவித்து மகிழும் அஸாதாரணமான அநுபவம் நம் ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஸந்நிதியில் தான் பெறமுடியும்.

இந்த வருடம் **பவித்ரோத்ஸவம் செப்டம்பர் 24 (திங்கள்) தொடங்கி 30 (ஞாயிறு) வரை ஏழு நாட்கள் நடைபெறுகின்றது.** அனைவரும் கலந்து கொண்டு, எம்பெருமான், ஆசார்யர்கள் மற்றும் பாகவதோத்தமர்களின் இன்னருளைப் பெற்றுய்யலாம்.

**ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் அழிசூர் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி**

# தூப்புல் ஸ்ரீ நிகமாந்தாசிரியன் வாழித்திருநாமம் - விவரணம்

ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**1. வஞ்சப்பரசமயம் மாற்றவந்தோன் வாழியே**

வேதங்களைப் ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளாத மதங்களையும், வேதங்களைப் ப்ரமாணமாக் ஒப்புக்கொண்டும், அதற்குத் தவறான பொருளைக் கூறும் மாயாவாத மதங்களையும் அழிக்க ஸ்ரீபாஷ்யாதி நூல்களை அருளிச்செய்து விசிஷ்டாத்வைத மதத்தை ஸ்தாபித்து, தமது அவதார நோக்கங்களை இனிதே நிறைவேற்றி திருநாட்டிற்க்கு எழுந்தருளிய ஸ்ரீ ராமானுஜர் காலத்திற்குப் பிறகு மீண்டும் கலிபுருஷனின் ஆவேசத்தால் தலையெடுக்க முற்ப்பட்ட மேற்கூறிய பிறமதங்களை ''வாதியர் தம் வாய்ப்பகட்டை மாற்றினோமே'' என்றும், ''நாம் பொன்னயிந்தை நகரில் முன்னாள் புணராத பரமதப்போர் பூரித்தோமே'' என்றும் தாம் அருளிச் செய்தபடி வாதப்போரில் பிறமதவாதிகளை வென்று ஸ்ரீராமானுஜ தர்சனம் மீண்டும் தழைத்தோங்கும்படி செய்தார் ஸ்வாமி தேசிகன்.

மேலும், சததூஷணி, பரமத பங்கம் முதலிய நூல்களை அருளிச்செய்து, பிற்காலத்திலும் ஸ்ரீராமானுஜ தர்சனத்தைப் பிறமதவாதிகள் தகர்க்கவொண்ணாதபடி செய்து அதற்கு



அரணமைத்தார். இப்படி உபகரித்த ஸ்வாமி தேசிகன் பல்லாண்டு வாழ்க என்பதாகவும், ஸ்வாமியினுடைய அவதார நோக்கம் இதன்மூலம் நிறைவேறியது என்பதையும் கூறுவதாக மேற்படி வாழித்திருநாமம் அமைந்துள்ளது.

**2. மன்னுபுகழ் பூதூரான் மனமுகப்போன் வாழியே**

ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்த ஸ்ரீ பகவத் ராமானுஜர் ஸ்தாபித்த விசிஷ்டாத்வைத மதம் ''யதீந்த்ர மதம்'' என்றும் ''ஸ்ரீராமானுஜ தர்சனம்'' என்றும் அவர் தம் திருநாமத்தை இட்டே வழங்கப்படுகின்றது.

இப்படி நிலையான புகழையடைந்த ஸ்ரீ பகவத் ராமானுஜரின் மனம் மகிழும்படி ஸித்தாந்த ஸ்தாபனம் மற்றும் ப்ரவசனங்களைப் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்த ஸ்வாமி தேசிகனின் கனவில் ஸ்ரீராமானுஜர் தோன்றி ''திருமந்த்ரார்த் தங்களையும், ஸ்ரீபாஷ்ய, பகவத் விஷயங்களையும் பின்னோர்கள்

## தேசிக மொழி

**காயத்ரீ மந்த்ரத்தின் பொருள்**

நம்முடைய புத்தியை தர்மம் முதலிய நல்லவற்றைப் பற்றி நிற்குமாறு நியமிக் கின்ற) ஸர்வஜகத் காரணபூதனான எம்பெருமானுடையதும், தேஜோ மயமானதும், நம்முடைய ஸர்வ பாபங் களையும் போக்கவல்லதுமான திவ்ய மங்கள விக்ரஹத்தை உபாஸிக்கிறேன்.

**ஶததூஷணி**

உஜ்ஜீவிக்கும்படி ப்ரபந்தங்களைச் செய்யக்கடவீர்'' என்று நியமித்தபடியை சிரஸாவகித்து, தத்வமுக்தாகலாபம், ந்யாய ஸித்தாஞ்சனம், ந்யாய பரிஸுத்தி, தத்வடீகை, மீமாம்ஸா பாதுகை, அதிகரணஸாராவளி, தாத்பர்ய சந்த்ரிகை முதலிய அநேக நூல்களை அருளிச்செய்ததாலும், துலுக்கர் படையெடுப்பின் போது, மிகவும் சிரமப்பட்டு, ஸ்ரீபாஷ்ய வ்யாக்யானமான ஸ்ரீ ச்ருத ப்ரகாசிகையைக் காத்துப் பரிசோதித்து ப்ரவ்ருத்திப்பித்ததாலும், ஸ்வாமி தேசிகன் மன்னுபுகழ் பூதூரரான ஸ்ரீபகவத் ராமானுஜரின் மனத்தை உகப்பித்தவர் என்பது தெளிவாகிறது.

**3. கஞ்சத் திருமங்கை உகக்க வந்தோன் வாழியே**

கஞ்சம் என்றால் தாமரைப்பூ. அம்மலரில் வாசம் செய்யும் பெரிய பிராட்டியை அணுஸ்வரூபி என்றும், அவள் மோக்ஷத்திற்கு உபாயமன்று என்றும், ஸ்ரீராமானுஜ தர்சனத்தைச் சார்ந்த சிலர் கூறிய தவறான கருத்துக்களை நிராகரித்து, பிராட்டியும் பெருமானைப்போல விபு என்றும், அவளுக்கும் புருஷகாரத்வம், உபாயத்வம், உபேயத்வம் என்ற மூன்று ஆகாரங்கள் உண்டு என்றும், அவளுடைய ப்ரபாவத்தை சரணாகதிகத்ய, சதுஸ்லோகீ பாஷ்யங்களிலும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்திலும் நிர்தாரணம் செய்தார் ஸ்வாமி தேசிகன்.



அதனால் ஸ்ரீரங்கநாச்சியார் தாம் மிகவும் உகந்து ''ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்'' என்ற பிருதை ஸ்வாமி தேசிகனுக்கு ப்ரஸாதித்ததாலும், இவர் கஞ்சத்திருமங்கையான பெரிய பிராட்டியை உகப்பித்தவர் என்பது தெளிவாகிறது.

**4. கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே**

கலிபுருஷனைத் த்வம்ஸம் செய்தவரான திருமங்கை ஆழ்வார் ''வையமெலாம் மறை விளங்க வாள்வேலேந்தும் மங்கையர்கோன்'' என்று ஸ்வாமி தேசிகனால் போற்றப்பட்டவர்.

இப்படிப்பட்ட ப்ரபாவத்தையுடைய கலியனின் உரைகளில் உள்ள பல பாசுரங்களின் அடிகளைப் ப்ரமாணங்களாகக் காட்டி, ஸ்வாமி தேசிகன், தாம் அருளிச்செய்த ஸ்ரீமத் ரஹஸ்யத்ரஸாரம், பரமபதஸோபாநம், முனிவாஹனபோகம் முதலிய பல ரஹஸ்ய க்ரந்தங்களிலும் அருளியதாலும், பெரிய திருமொழியில் ''மாற்றமுள'' என்னும் திருமொழியில் கலியன் அருளிச்செய்த உபமாநங்களையே தம்முடைய ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் (அங்கம் 3ல்) ஸுமதி விவேகனிடம் கேட்கும் வினாவில் ஒரே வாக்யத்தில் அமைத்தபடியாலும், சதுஷ்கவி சிகாமணியான கலியனைப்போலவே எம்பெருமானை விளக்காகவும், யானையாகவும், நிதியாகவும், முகிலாகவும் தம்முடைய மும்மணிக்கோவை, சரணாகதி தீபிகை, அச்யுத ஸதகம் மற்றும் வைராக்ய பஞ்சகம் முதலிய ஸ்தோத்ரங்களில் அருளியுள்ளதாலும், நாயிகா பாவத்தில் கலியனைப் போன்று தாமும் பல பாசுரங்களில் அருளியுள்ளதாலும், கலியன் தம்மைக் கிளியாகப் பேசியது போல், ஸ்வாமி தேசிகனும் ''கிடாம்பி அப்புள்ளார் தம்மைக் கிளியைப் பழக்குமாப்போலே பழக்கி வைத்தார்'' என்று தம்மைக் கிளியாக ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஆசார்யக்ருத்யதிகாரத்தில் அருளிச்செய்தபடியாலும், ஸ்வாமி தேசிகன் கலியனுடைய கருத்துக்களை முற்றிலும் தம் மனத்தில் கொண்டவர் என்பது தெள்ளத் தெளிவாகின்றது.

**5. செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே**

தம் மாதுலரான அப்புள்ளாரிடமிருந்து ஸகல சாஸ்த்ரங்களையும், திருவாய்மொழியின் அர்த்த விசேஷங்களை திருவாறாயிரப்படி வ்யாக்யானத்தைக் கொண்டும், மற்ற ப்ரபந்தங்களையும் தம் இருபது பிராயத்திற்குள்

கசடறக் கற்றவர் ஸ்வாமி தேசிகன். மேலும் ''செய்யதமிழ் மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே'' என்றும், ''எத்திசையும் வாழ இவர் பாடிவைத்த இவை நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே'' என்றும், ''துய்யதமிழ் இருபத்து நான்கின் பாட்டின் தொகை நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே என்றும் தாமே அருளிச்செய்திருப்பதிலிருந்து, ஸ்வாமி தேசிகன் செஞ்சொல் தமிழ்மறைகளைக் கற்றுத் தெளிந்தவர் என்பது நன்கு விளங்குகிறது.

இப்படி தாம் தெளியக்கற்ற தமிழ் மறையை, தம் சிஷ்யர்களும், பிற்காலத்தவர்களும் அறிய வேண்டி, திருவாய்மொழியின் உரையான திருவாறாயிரப்படியை விளக்கும் எழுபத்து நாலாயிரப் படி என்கிற உரையையும், த்ரமிடோபநிஷத்ஸாரம், த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளி ஆகிய நூல்களையும், அமலனாதிபிரனுக்கு முனிவாஹனபோகமும், கண்ணினுண் சிறுத்தாம்புக்கு மதுரகவி ஹ்ருதயமும் அருளிச்செய்தபடியால், செஞ்சொல் தமிழ் மறைகளைக் கற்றுணர்ந்து அதை சிஷ்யர்களுக்கும் தெளிவாக உரைப்பவர் ஸ்வாமி தேசிகன் என்று மங்களஸாஸனம் செய்யப்படுகிறார்.

**6. திருமலைமால் திருமணியாய் சிறக்க வந்தோன் வாழியே**

ஸ்ரீராமானுஜ தர்சனம் தழைத்தோங்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றிய திருவேங்கடமுடையான், ''கண்டாநாதாதிபா வேதா:'' என்று வேதாத்மாவாகச் சொல்லப்பட்ட திருமணியாழ்வாரை தம்முடைய தீர்த்தவாரி திருவோணத்தில், குத்ருஷ்டிகள் அழியும் படியும், வேதாந்த ஸித்தாந்தமான ஸ்ரீரமானுஜ தர்சனம் தழைத்தோங்கும்படியும், தூப்புல் குடியில் ஸ்வாமி தேசிகனை அவதரிப்பிக்கச் செய்தார் என்பது இங்கு அநுஸந்திக்கப்-படுகிறது.

மேலும், ஸ்வாமி தேசிகனிடம் வாதத்தில் தோல்வியுற்ற டிண்டிமன் என்னும் கவி, ''தர்மத்ராணாய யோபூத் ஸ ஜயதி பகவான் விஷ்ணு கண்டாவதார:'' என்று கூறியதிலிருந்தும், ''வேங்கடேஸாவதாரோயம் தத் கண்டாம்ஸோதவா பவேத்'' என்ற

## தேசிக மொழி

**ஸ்ரீகீதையின் ஸாராம்ஸம்**

பயனில் விருப்பமிருந்து எந்த உபாயத்தையும் கடைபிடிக்க முடியாமல் ஒருவன் வருந்தினாலும் அவனுக்கு அந்த உபாயமாக நான் இருந்து, அதனால் வரும் பயனை நான் கொடுக்கிறேன் என்று ஸ்ரீக்ருஷ்ணன் சரம ஶ்லோகத்தில் அருளிகிறான்.

**ரஹஸ்யத்ரய ஸாரம்**

நயினாராசார்யரின் மங்களாசாஸனத்திலிருந்தும், ''உத்ப்ரேக்ஷ்யதே புதஜநை: உபபத்தி பூம்நா கண்டா ஹரே: ஸமஜநிஷ்ட யதாத்மந இதி'' என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸ்வாமி தேசிகன் தாமேஅருளிச்செய்திருப்பதிலிருந்தும், இவர் திருவேங்கடமுடையானின் திருமணியின் அவதாரம் என்பது ஸ்பஷ்டம்.

இப்படி தம் அவதார நோக்கத்தை இனிதே நிறைவேற்றிய சிறப்புடையவர் ஸ்வாமி தேசிகன் என்பது தெளிவாகின்றது.

**7. தஞ்சப்பரகதியைத் தந்தருள்வோன் வாழியே**

ப்ரபத்தியே (சரணாகதி) சிறந்த உபாயம் என்பதை ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம், அபயப்ரதானஸாரம், ரஹஸ்ய சிகாமணி போன்ற சிறந்த க்ரந்தங்களின் வாயிலாகத் தெள்ளத்தெளிவாக விளக்கித்தந்து, சரணாகதி சாஸ்த்ரத்தை, பல கோணங்களில் பார்த்து, ஆராய்ந்து, ஜாதி, மத பேதமின்றி எல்லோரும் ப்ரபத்தியை அநுஷ்டிக்கலாம் என்று அருளிச்செய்தபடியாலும், சேதனனுக்கு ஆத்மோஜ்ஜீவன ஹேதுவான சரணாகதி மார்க்கத்தைப் பற்றிய கலக்கங்களுக்கு விடையாக ரஹஸ்யரக்ஷை, அஞ்சலி வைபவம் முதலிய பல நூல்கள் மூலமாக பரிஹரித்து அருளியவர் ஸ்வாமி தேசிகன். எனவே அவரை தஞ்சப் பரகதியைத் தந்தருளியவர் என்று கூறுவது சாலப்பொருந்தும்.

**8. செந்தமிழ் தூப்புல் திருவேங்கடவன் வாழியே**

ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிர திவ்யப்ரபந்தங்களான தமிழ்மறையே செந்தமிழ் மொழிக்கு ஒரு அடையாளமாகத் திகழ்கின்றது. இவைகள் மறையாகையாலே, உபய விபூதியிலும் ஓதப்படுகின்றன என்பது ஸ்வாமி தேசிகனின் திருவுள்ளம்.

மேலும், ''சந்தமிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்த குரு'' என்றும், ''நாவளரும் பெரு நான்மறை ஒதிய கீதமெல்லாம், பாவளரும் தமிழ் பல்லாண்டு இசையுடன் பாடுவமே'' என்றும், ''விண்ணவர் தம் குழாங்களுடன் வேதம்பாடி, பண்ணுலகில் படியாத இசையால் பாடும் பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே'' என்றும் ஸ்வாமி தேசிகன் தாமே அருளிச் செய்திருப்பதிலிருந்தும், இவருக்கு பரமபதத்திலும் திருப்பல்லாண்டு தொடங்கி நாலாயிர திவ்யப்ரபந்தத்தை இசையுடன் பாடுவதே நோக்கம், பேரின்பப் பெருவாழ்வு என்பது தெளிவாகிறது.

இப்படி இங்கும், அங்கும், எங்கும் செஞ்சொல் தமிழ் மறையைப் பாடுவதில் வேங்கநாதனான ஸ்வாமி தேசிகனுக்கு திருவுள்ளம் உகந்த படியாலும், இவரைச் செந்தமிழ் தூப்புல் திருவேங்கடவன் என்று குறிப்பிடுவது ஸாலப் பொருந்தும்.

மேற்கூறிய பெருமைகளை உடைய ஸ்வாமி தேசிகன் வாழியவே என்கிறது அவருடைய வாழித் திருநாமம்.

## தேசிக மொழி

**க்ருஷ்ணாவதாரத்தின் குறிக்கோள்**

பகவான் க்ருஷ்ணனாக அவதரித்தது, வேதம் என்னும் மாடத்தின் மேல் கீதையாகிய உயர்ந்த தீபத்தை ஏற்று வதற்கே. அசுரரை அழிப்பது என்பது வெறும் ஒரு காரணமே.

**தயா ஶதகம்**

**நானிலமும் தான் வாழ, நான்மறைகள் தாம் வாழ,**
**மாநகரில் மாறன்மறை வாழ - ஞானியர்கள்**
**சென்னியணிசேர் தூப்புல் வேதாந்ததேசிகனே**
**இன்னுமொரு நூற்றாண்டிரும்**

இப்பூமியிலுள்ள, குறிஞ்சி, முல்லை, மருதம் மற்றும் நெய்தல் ஆகிய நான்கு விதமான நிலங்களில் வாழ்கின்றவர்களும், ரிக், யஜுர், சாமம், அதர்வணம் முதலிய நான்கு வேதங்களும், மற்றும் இவைகளின் ஸாரமான கொள்ளப்படும், திருக்குருகை மாநகரில் அவதரித்த நம் காரிமாறன் சடகோபன் நம்மாழ்வார் திருவாக்கிலிருந்து தோன்றிய திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி மற்றும் பெரிய திருவந்தாதி முதலிய ப்ரபந்தங்களாகிற தமிழ் மறைகளும், இப்படி இந்த வடமொழி மற்றும் தென்மொழி மறைகளை எப்பொழுதும் அநுஸந்தித்துக்கொண்டு இருக்கும் ஞானிகளுடைய சிரஸிற்கும், ஞானத் திற்கும் அணிகலன் போல் விளங்கக்கூடிய தூப்புல் என்னும் குலத்தில் அவதரித்த ஸ்வாமி வேதாந்த தேசிகனே, தேவரீர், ஏற்கனவே ஒரு நூற்றாண்டு எழுந்தருளியிருந்தாற்போல் மீண்டும் ஒரு நூற்றாண்டு எழுந்தருளியிருந்து இவ்வுலகிலுள்ளவர்களை உஜ்ஜீவிப்பித்து அருள வேண்டும்.

**வாழியணி தூப்புல் வருநிகமந்தாசிரியன்**
**வாழியவன் பாதாரவிந்தமலர் - வாழியவன்**
**கோதிலாத்தாண்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்**
**தீதிலா நல்லோர் திரள்**

மேலே கூறப்பட்டுள்ளது, ஸ்வாமி தேசிகனின் வாழித்திருநாமத்திற்குப் பிறகு அநுபந்தமாக அநுஸந்திக்கப்படுகிறது.

ஸ்வாமி தேசிகனும், அவர் தாம் அவதரித்த இப்பூவுலகிற்கெல்லாம் அணிகலன் போல் திகழ்கின்ற தூப்புல் நகரும், அவருடைய மணம்பரப்பும் மகரந்தத்தையுடைய மலர் போன்ற பாதாரவிந்தங்களும், மேலும், ஸ்வாமி தேசிகனுடைய குற்றமொன்றில்லாத திருவடித் தாமரைகளை நினைந்து அவைகளை எப்பொழுதும் கொண்டாடிக்கொண்டிருக்கும் தீதொன்றும் இல்லாத பாகவதர்களுடைய கூட்டத்தில் இருப்பவர்களும் நெடுநாள் வாழியவென்று இதன் மூலம் மங்களாசாஸனம் செய்யப்படுகின்றது.

# சிறுவர்க்காக
# பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

ஶ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்ய நாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**ஸுமதி:** பாட்டீ! ஸ்வாமி தேஶிகன் செய்து காட்டிய அதிஶயங்கள் பற்றிய சரித்ரங்களை சொல்கிறேன் என்றீர்களே!

**பங்கஜம் பாட்டி:** ஆஹா! சொல்றேன். இப்ப நான் சொல்றதெல்லாம், நடந்த வரிசை-ல இல்ல; மொதல்ல - அவருடைய மந்த்ர-ஸித்தி / ஶக்தி -யைக் காட்டுவது.

ஒரு ஸமயம் பிற மதத்தச் சேர்ந்த துறவி ஒருத்தர், வாதத்துக்கு வந்து தோத்துப்போயிட்டார். ஆனா அவர் மந்த்ரவாதியும் கூட. அதனால, பழி வாங்றதா நெனச்சு, குளத்து ஜலம் முழுக்க குடிச்சார்; அதனால, ஸ்வாமி யோட வயிறு வீங்க ஆரம்பிச்சுது. இத்த தெரிஞ்சிண்ட ஸ்வாமி, பக்கத்தில் உள்ள ஒரு தூணை நகத்தால கீறினார்; உடனே அதிலேர்ந்து ஜலம் பெருக ஆரம்பிச்சு, ஸ்வாமியின் திருவயிறும் வடிஞ்சு போச்சு. வாதியும் கர்வம் அடங்கி, மன்னிப்பு கேட்டார்.

இன்னோரு ஸமயம், ஒரு பாம்பாட்டி தன் பாம்புகள ஸ்வாமி மேல ஏவி விட்டான். ஆனால் அவைகள், ஸ்வாமி கிழித்த கோட்டைத் தாண்டமுடியாமல் நின்னுதுடுத்து. ஒரு கொடிய பாம்பு மட்டும் கோட்டையும் தாண்டி வந்துது. ஸ்வாமி கருடமந்த்ரத்தச் சொல்லி வேண்ட, கருடன் வந்து எல்லா பாம்பையும் தூக்கிண்டு போயிட்டார். தன் பொழப்பு போச்சேன்னு பாம்பாட்டி அழுது மன்னிப்பு கேட்க, இவரும் மறுபடி கருடனை ப்ரார்த்தித்து, பாம்புகள மீட்டுக் கொடுத்தார்.

அடுத்து வாதிகள ஜயித்தல். ஶ்ரீரங்கத்துக்கு வந்த சில வாதிகள், அங்குள்ள ஶ்ரீவைஷ்ணவர்கள வாதத்துல ஜெயிச்சுட்டா; அதனால நம்மவா காஞ்சிலேர்ந்து ஸ்வாமி-ய வரவழிச்சா. பெரிய பெருமாள்-தாயார- ஸேவிச்சுட்டு வாதமண்டபத்துக்கு ஸ்வாமி எள்ளினார். அங்கு, முன்னாலேயே வந்த வாதி, இவரப் பார்த்து, 'ஆகாரம் ஹ்ருஸ்வமாயிருக்கே'-ன்னு கிண்டல் பண்ணார். உடனே ஸ்வாமி, 'ஆ-காரம்' எப்பவுமே



தீர்க்கம்தான்; இது தெரியாதா-ன்னாராம். வாதியும் வெட்கப்பட்டார் ....

**ஸுமதி:** பாட்டீ! பாட்டீ!! ஒண்ணும் புரியல்ல. வாதி சொன்னதி-ல கிண்டல் எங்க இருக்கு? ஸ்வாமியின் பதில்-ல, வாதி ஏன் வெட்கப்பட்டார்?

**பங்கஜம் பாட்டி:** (சிரிச்சிண்டே) ஸ்வாமி உருவத்துல சின்னவரா இருப்பாராம். வாதியோ ஆஜாநுபாஹுவா - வாட்ட சாட்டமா - இருந்தார். அவர் சொன்ன -ஆகாரம்-னா, உருவம். ஹ்ருஸ்வம்-னா சின்னது. அதனால, உருவத்துலகூட எனக்கு ஸமம் இல்லையே-ன்னு கர்வப்பட்டு கிண்டல் அடித்தார். ஆனா ஸ்வாமி, தன் வ்யாகரண சாதுர்யத்தைக் காட்டினார் ; ஆகாரம் என்பதை 'ஆ'-காரம் எனக்கொண்டார் ங்அ-காரம், ஆ-காரம், இ-காரம்.. எனச் சொல்றோம் அல்லவாசி. அப்போது, அ, இ, உ என்பவை ஹ்ருஸ்வமாம் ங்குறிலாகும்சி. ஆ, ஈ, ஊ முதலியவை தீர்க்கமாம் (நெடிலாகும்). இவ்விதத்தில பார்த்தால், ஆ என்பது நெடில்தானே தவிர, குறில் (ஹ்ருஸ்வம்) இல்லையே! இந்த இலக்கண அடிப்படைகூட அறியாம வாதம்புரிய வந்தீரோ! என்றார். இப்ப புரியறதா, வாதி ஏன் வெட்கப்பட்டார்-னு.

**ஸுமதி :** ரொம்ப ஸ்வாரஸ்யமாயிருக்கு பாட்டீ! அப்பறம் என்னாச்சு வாதம்?

## தேசிக மொழி

**ஸ்ரீ ஹயக்ரீவன்**

ஹயவதனன் ஆசார்யனுடைய மனத்தையும் நாக்கின் நுனியையும் ஸிம்ஹாஸனமாகக் கொள்வதில் சுவை காண்கிறான்

**ரஹஸ்யத்ரய ஸாரம்**

**பங்கஜம் பாட்டி:** என்னாகும்; ஸ்வாமி ஜயிச்சார். அர்ச்சகர், தீர்த்த ப்ரஸாதம் கொண்டுவந்தார். அப்ப, அந்த வாதி, ஸ்வாமி-ய பார்த்து, நீர் ஜயிச்சீர்; நான் தோற்றேன். ஆனா உங்களவா எங்கிட்ட தோத்துட்டா. அதனால, உமக்கு அடுத்து மரியாதை எனக்குதான், அப்படீன்னார். ஸ்வாமியும் ‘அப்படியே’-ன்னுட்டு, அர்ச்சகரிடம் வைஷ்ணவ கோஷ்டிக்கு மொதல்ல ஸாதிக்கச் சொன்னார்; கடசி-ல தான் வாங்கிண்டு, ‘இப்ப எனக்கு அடுத்து நீர் வாங்கிக்கலாம்’ அப்படீன்னார். வாதி, இப்பவும் தோத்துப்போயிட்டார்.

**இன்னுமொரு நிகழ்ச்சி:** ஸ்வாமி காஞ்சியில் ஏள்ளியிருந்த ஸமயம். பெருமாள் வீதி புறப்பாட்டின்போது முன்னாடி ப்ரபந்தம் ஸேவிப்பதை, ஶாஸ்த்ரத்துக்கு புறம்பானது; ஏனெனில் அது தேவபாஷையல்ல என சிலர் எதிர்த்தனர். ஸ்வாமி அவர்களை தமிழ்மொழி அகஸ்த்ய முனிவரால் செப்பனிடப்பட்ட பாஷையென்றும்; ப்ரபந்தங்கள் நித்யஸூரிகள் அவதார மான ஆழ்வார்களால் பாடப்பெற்ற பகவானின் குணங்களைப் போற்றும் பாடல்கள் என்றும் ஸ்தாபித்து, அவர்களை வாதத்தில் வென்றார். தேவப் பெருமாளும் உகந்து, ஸந்மானம் செய்யும் முறையில், தான் புறப்பாடு கண்டருளும்போது இசைக்கப்படும் ‘இரு திருச் சின்னம்’ என்ற வாத்யத்தில் ஒன்றை ஸ்வாமிக்கு அருளினார். அதனால் இன்றும் பெருமாள் கோவிலில் புறப்பாட்டின்போது ஒரு திருச்சின்னம் மட்டும்தான் வாசிக்கப்படுகிறது. ஸ்வாமியும் அதை ஏற்று, அதன் ஒலி மந்த்ர-த்ரயத்தின் அர்த்தத்தைப் பேசு வதுபோல் அமைந்திருப்பதாக அநுபவித்து, திருச்சின்னமாலை எனும் தமிழ் ப்ரபந்தத்தை இயற்றி, தேவாதிராஜன் திருவடிகளில் ஸமர்ப்பித்தார்.

மற்றொரு ஸமயம், ஸ்ரீரங்கத்தில் இதேபோல் வாதிகள் எதிர்க்க, அவர்களை ஜெயித்து, ப்ரபந்தம் ஸேவிக்கும் அத்யயன உத்ஸவத்தை மீண்டும் நடத்த வழி வகுத்தார். நம்பெருமாள் மனமுவந்து, அர்ச்சக-முகேன ஸ்வாமிக்கு ‘வேதாந்தாசார்யர்’ என்ற விருதை அநுக்ரஹித்தார். பிராட்டியும் தன் பங்குக்கு ‘ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்’ எனவும்; அங்கு குழுமியிருந்த அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களும், பெருமாள் நியமனத்துடன், ‘கவி-தார்க்கிக ஸிம்ஹம்’ எனவும் அருளப்பாடு இட்டனர். இவைகளை தலையால் பெற்றுக் கொண்ட ஸ்வாமியும், தற்பெருமையை விரும்பாதவராக இருந்தபோதிலும், எம்பெருமான் அநுக்ரஹித்த விருது என்ற மரியாதைக்காக பல நூல்களில் தன்னுடைய பெயருக்கு முன்பாக இவற்றை சேர்த்துச் சொல்வர்.

ஸ்வாமி காலக்ஷேபங்கள் ஸாதித்துக்கொண்டு ஸ்ரீரங்கத்தில் எழுந் தருளியிருந்த ஸமயம், ஒரு வடமொழிக் கவி, ‘நீர் பெரிய கவி’ என்பதை என்னை ஜெயித்து, நிரூபித்துக் காட்டும் - யார் ஒரு இரவுப் பொழுதில் அதிகமான ஶ்லோகங்களை இயற்றுபவர் எனப் பார்ப்போம் - எனப் போட்டி யிட்டார். என்னவாயிற்று என்பதை அடுத்த இதழ்வரை பொறுத்திருந்து பார்ப்போம்.

**(தொடரும்)**

## தேசிக மொழி

**அர்ச்சா மூர்த்தி**

திருமாலின் அழகிய திருமுகமும் திருக்கண்களும் வாய்ந்ததும், தனக்குப் பிடித்ததுமான நல்ல விக்ரஹத்தை பொன், வெள்ளி முதலியவற்றால் செய்து அர்ச்சித்து வணங்கி ஆராதிக்கிறவன் எல்லா பாவங்களும் நீங்கி ஸ்ரீவைகுண்டத்தை அடைகிறான் என்று அருளிகிறார் சௌனக மஹரிஷி.

**- ரஹஸ்யத்ரய ஸாரம்**



ஸ்வாமி தேசிகனுக்காக ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷனால் ஸமர்ப்பிக்கப்பட்ட நூதன ஸ்வர்ண ஸிம்ஹாஸனம்




அத்யாபக கைங்கர்ய ஸபையினரால் ஸ்வாமி தேசிகனுக்கு ஸமர்ப்பிக்கப்பட்ட 'ராமாநுஜ தயா பாத்ரம்' தனியன் ஸ்வர்ண ஹாரம்

